உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உஅ.] பிரமோதூத௵ சித்திரை௴ [பகுதி-சு.

Vol. XXVIII. April–May 1930. No. 6.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[ககூசு-ம் பக்கத்தொடர்ச்சி.]

நட்புக்கோட்படலம்.

இராமன் சுக்கிரீவனோடு சினேகஞ் செய்ததைக் கூறுவது.

[இராமலக்குமணரிடம் சுக்கிரீவனைக் கொணர்வதாகக் கூறிச்சென்ற அநுமான், அவனிடம் அணுகியபோது "எல்லாரும் ஈடேறினோம்! வாலிக்குக் காலன் வந்தான்! நாமும் நம் குலமும் ஞாலமும் உய்ந்தோம்! உய்ந்தோம்! அவனைக் கொன்று உனக்கு அரசளிப்பவன் வந்தான்" என்று கூறி உவகைக்கூத்தாடினான். பின்பு, இராமலக்குமணர்வரலாறு முழுதும் மொழிந்து, "அவர்கள் சீதையைத்தேடுதற்கு உனது உதவியைநாடி உன்னுடன் சினேகஞ்செய்யவந்திருக்கின்றார்கள். அவர்களைக் காணவா" என, அவன், "உன்னை உடைய எனக்கு என்னது அரிது" என்று முகமன் மொழிந்து, அவனுடன் சென்று இராமலக்குமணரை அடைந்தான்.

அடைந்தவன், ஒரு மரகதமலை, சிகரத்தில் மேகம் வீற்றிருக்க, அதன்கீழ்ச் சந்திரன் தயங்க, அதன்கீழ்த் தாமரைமலர்கள் பூத்துப் பொலியக் கண்டாற்போலச் சிகையும் முகமும் கைகளும் கால்களும் காண்பவர் கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பும் குளிர்ப்பும் அளிக்கும் பசியமேனியனான இராமனையும் பச்சைமலைப்பக்கத்தே பசும்பொன்மலை போல நின்ற இலக்குமணனையும் பார்த்தான்.]

சுக்கிரீவன் இராமலக்குமணரைக் கண்டு அதிசயபரவசனுகுதல்.

439 நோக்கினன், நெடிது நின்றான், நொடிவரும் கமலத் தண்ணல்
ஆக்கிய உலக மெல்லாம் அன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்திரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீராய் விளைந்த என்பான்.

இ-ள். (சுக்கிரீவன், இராமலக்குமணரைப்) பார்த்து, (அவர்கள் அழகில் ஈடுபட்டு,) நெடுநேரம் (அதிசய பாவசனுய்) நின்று பிரமன் படைத்த உலகத்தாரெல்லாரும் (படைப்புத் தொடங்கிய) அந்நாள் தொட்டு இந்நாள்மட்டும் செய்த புண்ணியங்க ளெல்லாம் திரண்டு இரண்டுவடிவமாகி மேலாக வளர்ந்த தோள்கள் பெற்று வீராகிப் பலப்பட்டன என்று எண்ணுவானுனன்.

நெடிது - நெடுநேரம். நொடித்தல் - சொல்லுதல். அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். நொடிவு அரு கமலத்து அண்ணல் - சொல்லுதற்கரிய (மகிமையுடைய திருமாலின் உந்தித்) தாமரையில் உதித்த பெருமையுடையோனுன பிரமன். ஆக்குதல் - சிருஷ்டித்தல். காறு - அளவு. பாக்கியம் - புண்ணியம். படிவம் - வடிவம். மேக்கு - மேல். புரிந்தபாக்கியம் என மாற்றுக. 'ஆய்' ஆக என்னும் எச்சத்திரிபு. 'விளைந்தன' என்பது அன் சாரியை பெறுமல் 'விளைந்த' என நின்றது.

"'புரிந்ததெல்லாம்,' 'பெற்ற', 'விளைந்ததென்பான்' என்பன பிரதிபேதம்."

உலகமெல்லாம் புரிந்த பாக்கியமெல்லாம் குவிந்து மேக்கு உயர் தடந்தோள்பெற்று இருவீரர் படிவமாக ஆகி விளைந்தன என இயைத்தும் பொருள்கூறலாம்.

'நின்றான்' என்பது, அதன் சாதாரண அருத்தமான நிற்றலைச் செய்தானென்ற பொருளுடையதாகவன்றிக் கண்டபொருளின் அதிசயமான அழகில் கருத்து ஆழ்ந்து அழுந்த அவசமாகி அந்த அழகை நோக்கிய கண் இமையாமல் நோக்கி நுகரும் இன்பநுகர்ச்சியிற் பொழுது போவது தெரியாமல் தாழ்த்துநின்றுனென்னும் விசேடமான பொருளுடையதாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. சூர்ப்பனகை சீதையைக் கண்டபோது 'நெடிதுநோக்கி............அழகுக்

கெல்லையில்லையா மென்ன நின்றாள்' என்பதையும், அவள் சீதாராமர் இருவரையும் ஒருசேரப் பார்த்தபோது 'பொருந்திறத்தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்' என்பதையும் (சூர்ப்பணகைப்படலம் ௬௰ ௬௧), அயோமுகி இலக்குமணனைக் கண்டு 'நின்றனள் ஆசையின் நீர்கலுழும்கண்—குன்றி நிகர்ப்ப குளிர்ப்ப விழிப்பாள்' என்பதையும் (அயோமுகிப்படலம் ௪௯), இராமலக்குமணரைக் கண்ட அநுமான் 'இருவரை எய்தநோக்கி.............................நின்றான்' என்பதையும் (அநுமப்படலம் ௧௧) காண்க.

சுக்கிரீவன், இராமலக்குமணரிருவருடைய அவயவங்களனைத்தையும் நோக்கி அகம் மிக மகிழ்ந்தவன், 'மேக்குயர் தடந்தோள் பெற்று' எனத் தோள்களை மட்டும் சொல்வானேனெனில், அவன் அவர்கள் தோள்களை நோக்கினபோது அவை அசாதாரண அற்புத பலமுடையவையென்றும் அந்தப் பலம் வாலிதோள் வலிக்கு அதிகமானதாய் அவனைக் கொல்லவல்லதென்றும் கருதியதனாலென்னலாம். அவ்வாறு கருதியது காரணமாகவே, அவர்களது அழகு அருள் அறிவு ஆற்றல் ஆகியவைகளுள் ஆற்றலைச் சிறப்பாகக்கொண்டு அவர்களை அழகினர் அருளினர் அறிவினரென்னாமல் 'வீரர்' என்றான் போலும்.

'உலகமெல்லாம் புரிந்த பாக்கியமெல்லாம் வீரராய்' உற்றன அல்லது வந்தன அல்லது தோன்றின அல்லது வெளிப்பட்டன என்னாமல் 'விளைந்தன' என்றது, உலகத்தோருடைய புண்ணியங்கள், ஒன்றும் குன்றுதலின்றி, எல்லாம் சேர்ந்து இருவீரராக உருவான மாத்திரையாயில்லாமல், அப் புண்ணியங்களனைத்தும் விதைகள் போல ஒன்று பலவாக விளைந்து ஒருங்கு திரண்டு இரண்டு வீரராயினவென்று குறித்தற்குப்போலும்.

இராமலக்குமணரால் மனிதசாதி தேவசாதியினும் சிறப்புடையதாயினதெனல்.

440 தேறினன், அமரர்க் கெல்லாம் தேவராம் தேவ ரன்றே,
மாறிஇப் பிறப்பில் வந்தார், மானுட ராகி மன்னோ,
ஆறுகொள் சடிலத் தானும் அயனுமென் றிவர்க ளாதி
வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்ற தன்றே.

இ - ள். (முற்பிறப்பில்) தேவர்களெல்லாருக்கும் (முதன்மையுடைய) தேவர்களாகிய (மும்மூர்த்திகளென்னும்) தேவர் (களாயிருந்தவர்) கள் இப்பிறப்பில் (மூவராந்தன்மையும் தேவராந்தன்மையும்) மாறி (இருவராய்) மனிதராய்வந்தார் (ஆவர், இவ்விருவரும்: ஆகவே,) சிவனும் பிரமனும் என்ற இவர்கள் முதலிய வெவ்வாறுகவுள்ள (தேவ) கணங்களெல்லாவற்றையும் மானுடகணம் செயித்ததென்று நிச்சயித்தான் (சுக்கிரீவன்).

அமரர் - தேவர். சடிலம் - சடை. அயன் - பிரமன். குழு-கணம் - கூட்டம். மானுடம் - மனிதஇனம் - மனுஷஜாதி. அன்றே மன்னே அசைகள். பாட்டின்முடிவில் நின்ற ஏ தேற்றப்பொருளில் வந்த இடைச்சொல். அன்றே என்பதை அல்லவா என்னும் பொருளுடையதாகவுங் கொள்ளலாம். என்றே தேறினன் என(க் கடைதலைவிற்பூட்டு ஆக) இயைக்க. 'தேவர்தந் தேவரென்றே' 'வந்த மானுயர் யாக்கை' 'வென்றதன்றே' என்பனவும் பாடங்கள்.

கவியில் மனிதப்பிறப்பை இப்பிறப்பென்றதனுல், உரையில் தேவப்பிறப்பு முற்பிறப்பெனப்பட்டது காண்க.

முற்பிறப்பில் மூவராய்த் தேவராயிருந்தவர்கள் இப்பிறப்பில் இருவராய் மனிதராய் மாறிவந்தார்களென்பது முன்னிரண்டடிக் கருத்து. முன்பு, தேவசாதி, மனிதசாதியினும் சிறந்ததாயிருந்தது: இப்போது, அத்தேவருள் முதல்வரான முத்தேவர் இருமனிதராயிருப்பதனுல், தேவசாதியினும் மனிதசாதி சிறந்ததாய்விட்டதென்பது பின்னிரண்டடிக் கருத்து. முத்தேவர் இருமனிதரானு ரென்ற கருத்து, இதன் முன் (அநுமப்படலம் எ-ம் கவியில்) அநுமான் 'தேவருக் கொருதலைவ ராம்முதற் றேவரெனின், மூவர்மற் றிவர்இருவர்' என இராமலக்குமணரைக் குறித்துக் கருதியதை அநுவதித்துப் பூரிப்பதாயிருத்தல் காண்க.

'அமரர்க்கெல்லாம் தேவர்தந்தேவர்' என்றபாடங்கொண்டால், அதற்குத் தேவர்களெல்லாருக்கும் (மேலான) தேவர் (ஆன மூவர்)களுடைய தேவர் (ஆன முழுத்தனி முதற்கடவுள்) என்று பொருள் கொள்க.

'அமரர்க் கெல்லாம் தேவராந் தேவர்' என்பதன் பொருள் "எல்லாத் தேவர்கட்கும் கடவுளாகிய முதற் கடவுளே [ஸ்ரீமஹாவிஷ்ணுதாமே]" என்பது முந்திய உரை.

இராம சுக்கிரீவர் சிநேகவருணனை.

[இராமன், இருக்குமிடத்தைக் கைந்நீட்டிக்காட்டி "இங்கேயிருக்க" எனச் சுக்கிரீவன் இருந்தான். இராமச் சந்திரனும் சூரியபுத்திரனும்" சந்தித்த காட்சி அமாவாசையன்று சந்திர சூரியர் சந்தித்த தோற்றம் போன்றது. அவர்கள் இருவரும் இணங்கி இணைந்திருத்தல், இராக்கதர் கூட்டமான பாவ இருள் நீங்க, அவ்விருளால் அடங்கி ஒடுங்கியிருந்த தேவர்கூட்டமான புண்ணிய ஒளி ஓங்க நன்னாளும் நல்லோரையும் ஒன்றுகூடுதல் ஒத்தது.]

441 கூட்டமுற் றிருந்த வீரர், குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார் :
மீட்டும்வா ளரக்க ரென்னும் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமும் கிடைத்த தொத்தார்.

இ-ள். (சிநேகராய்ச்) சேர்க்கையுற்றிருந்த இராம சுக்கிரீவர், (ஒருவர்) உத்தேசித்த ஒருகாரிய (நிறைவேற்ற)த்துக்கு (அவர்) முற்காலத்தில் (முந்திய சென்மத்தில், நோற்றுச்) சம்பாதித்த புண்ணியமும் இக்காலத்தில் (இந்தச் சென்மத்தில், செய்த) முயற்சியும் ஒன்றுகூடிய தொத்தார்கள்: பின்னும் (எதனை யொத்தார்க ளென்றால்,) இராக்கத ரென்னும் பாவ (விருக்கத்தின் மேற்பாக)த்தை (அறுத்துத் தள்ளி, அடிப்பாகத்தை வெட்டிஒழித்து) வேரோடழிக்க (விரும்பினார்க்கு)க் கல்வியும் ஞானமும் (ஆகிய இரம்பமும் கோடரியும்) கிடைத்ததையும் ஒத்தார்கள் (என்க).

பரசுராமப்படலம் ௪0-ம் கவியில் 'எண்ணிய பொருளெலாம் இனிது முற்றுக' என்பதிற்போல, இந்தக் கவியிலும் 'பொருள்' 'காரியம்' என்ற பொருள்பட நின்றது. ஈட்டல் - சம்பாதித்தல். 'கூட்டமொத்திருந்த' என்பதும் பாடம்.

"கல்வியும் ஞானமும் கூடியவழியே தீவினையொழிதல்போலவும், ஊழ்வினையும் முயற்சியும் கூடியவழியே ஒரு காரியம் முற்றுதல்போலவும், இவ்விருவரும் நண்பினராய்க் கூடியதனாலேயே ராக்ஷஸஸம்ஹாரம் நிறைவேறுமென்பதாம். - உவமையணி."

சுக்கிரீவன் இராமனைத் துதிக்க, இவன் தான்வந்தது எதற்காகவென, அவன் தன்நிலைகூறிச் சரணடைதல்.

[அப்போது, சுக்கிரீவன், இராமனை நோக்கி "உன்னை அடையப் பெற்ற என்னினும் புண்ணியர் எவருமிலர். எனது நல்வினைப்பயன் சருவலோகநாயகனாகிய உன்னை அடையும்படி எனக்கு உதவியது. விதியே உதவும்போது, பெறுவதற்கரியது எதுவிருக்கிறது" என்று, இதயமாரப்புகழ்ந்துரைத்தான். இராமன், "நீ இந்த மலையில் இருக்கின்றா யென்று சவரியென்னுந் தவமுதியாள் சாற்றத் தெரிந்து, எங்கள் கவலை உன்னால் நீங்குமென்று இங்கே வந்தோம்" என்றான். சுக்கிரீவன், "என் தமையன் வாலி என்னைக் கொல்லுதற்கு ஓங்கிய கையினனாய், யான் உல கெங்கும் ஓடியும் விடாது தொடரத் தப்பிப்பிழைத்து, இந்த மலையில் வந்து சேர்ந்தேன். அவன் இங்கு வந்தால் நாசமடைவானென்ற சாப முளதாதலால், இதுகாறும் உயிரோடிருக்கிறேன். உன்னைச் சரணடைந் தேன். என்னைக் காப்பாயாக" என்றான்.]

இராமன் சுக்கிரீவனுக்களித்த சிநேக வாக்குத்தத்தம்.

442 என்றஅக் குரக்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி,
"உன்றனக் குரிய இன்ப துன்பங்கள் உள்ள, முன்னாள்
சென்றன போக; மேல்வந் துறுவன தீர்ப்பல்: அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர்" என மொழியும் நேரா,

443 "மற்றினி உரைப்ப தென்னே, வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்; தீயரே யெனினும் உன்னோ
டுற்றவர் எனக்கும் உற்றார்; உன்கிளை எனதென் காதற்
சுற்றம்உன் சுற்றம்: நீஎன் இன்னுயிர்த் துணைவன்" என்றான்.

இ-ள். ("என்னைக் காப்பாயாக") என்றுசொன்ன சுக்கிரீவனை இராமன், (மனம்) இரங்கி (க் கருணையோடு)நோக்கி "உனக்குரிய இன்ப துன்பங்களுள் இதற்குமுன் (நீ அனுபவித்துக்) கழிந்தவை போகுக. இனிமேல் வரும் துன்பங்களை நீக்குவேன். அவைகள் (தம்முள், ஒரு கால், எவைகளேனும் நீக்கப்படாமல் எஞ்சிநின்றால், அப்படி) நின்ற துன்பங்கள் எனக்கும் உனக்கும் சமம். (அவற்றை நான் உன்னோடு பாதிபாதியாகப் பகுந்தனுபவிப்பேன்)" என்று வாக்குத்தத்தம் அளித்து

(அதனை வலியுறுத்துவானாய்,) "இனி வேறுகூறுவானேன் ; விண்ணில் (ஆயினும்) மண்ணில் (ஆயினும் வேறெங்காயினும்) உன்னை வருத்தினோர் என்னை வருத்தினோர் (ஆவர்) : உன்னோடு (இட்டாராகச்) சேர்ந்தோர் துட்டரேயாயினும் எனக்கும் இட்டர் (ஆவர்) : உன் உறவினர் என் உறவினர் (ஆவர்) : என் பந்துக்கள் உன் பந்துக்கள் (ஆவர்) : நீ என் பிராண சிநேகிதன் (ஆவாய்)" என்றான்.

குரங்கு வேந்து குரக்கு வேந்து என வலித்தல் செய்யுள்விகாரம். இராமனும் என்பதில் உள்ள உம்மை, பொருள் குறியாத அசைநிலை. போக - போகுக: வியங்கோள் வினைமுற்று : செய்ய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக்கொண்டு பொருள்கூறுவாருமுளர். நேரா — கொடுத்து. செறுதல் - வருத்துதல். 'செலினஞ்சிற் செறிற் சாம்பும்' (கலித். 78) தமிழகராதி.

'நின்றன (வான துன்பங்கள்) எனக்கும் நிற்கும் நேர் (—சமம்— எனக்குப் பாதி உனக்குப் பாதி)' என்றது, "துன்பம் அரையாம் துணைவரது கூட்டத்தால் - இன்பம் இரட்டியாமே" (அகவிகை வெண்பா) என்ற கருத்துள்ள ஆங்கிலப்பழமொழியை நினைவுறுத்துகின்றது.

இராமன் செய்த சிநேகவாக்குத்தத்தத்தில் 'தீயரேயெனினும் உன்னோடுற்றவர் எனக்கும் உற்றார்' என்ற பகுதி, விவாதத்துக் கிடமானதாகத் தோன்றுகின்றது. 'உற்றவர்'க்கு முன்வரும் 'செற்றவ'ரையும் பின்வரும் 'கிளை'யையும் சுக்கிரீவன் செற்றவர் (- வருத்துபவர்) ஆகவும், கிளை (-சுற்றத்தார்) ஆகவும் விரும்பி ஆக்கிக்கொள்ளவில்லை. அவர்கள், அவன்விருப்பத்தாலல்லாமற் செற்றவரும் கிளையும் ஆனவர். அவ்வாறன்றி, 'உற்றவர்' (—சிநேகிதர்) அவன் விருப்பத்தால் உற்றவராக்கிக்கொள்ளப்பட்டு அவனுக்கு உற்றவராயுள்ளவர். இராமன் அவனை நண்பனாக ஆக்கியதுபோல ஆக்காதிருத்தலுமாமேயன்றி, ஆக்கியபின் "நட்டபின் வீடில்லை* நட்பாள்பவர்க்கு" (குறள் 791) என்பதனால் விலக்குதல் அறமாகாது. அதே நியாயத்தால் சுக்கிரீவனும் அவனால் நண்பினராக்கப்பட்டாரை விலக்குதல் கூடாமை தெளிவாம். அவன் ஆராய்ந்து துணிந்து தக்காரையே நண்பராகக்கொண்டிருப்பான். அப்படிக் கொள்ளப்பட்ட நண்பினர், ஒருகால், தீயராயிருந்தாலும், அத

*வீடு - விடுதல்,

னைத் தெய்வத்தால்வந்த கேடுபோலக் கருதி, அவரைத் தான் விலக்காமை சிநேகதருமமென்பது குறிக்கத் 'தீயரே யெனினும் உன்னோடுற்றவர் எனக்கும் உற்றார்' என்றானெனலாம். இந்த உலகத்தில் தீமை கலவாத சுத்த நன்மையுமில்லை, நன்மை கலவாத சுத்தத் தீமையு மில்லையென்றும், "குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்—மிகைநாடி மிக்க கொளல்" என்றவாறு நன்மைமிக்காரை நல்லவரென்றும் தீமைமிக்காரைத் தீயவரென்றும் கொள்வது அறிவுடைமையென்றும், சுக்கிரீவனும் அவனைச் சேர்ந்தவர்களும் மொத்தத்தில் நல்லவரென்றும் கருதிச் சுக்கிரீவனுடன் சிநேகஞ்செய்த இராமன், சுக்கிரீவனோடு சேர்ந்தவர்களுள் நல்லோர் பெரும்பான்மையராகவும் தீயோர் சிறுபான்மையராகவும் இருப்பரென்றும், அவர்களுள் நல்லோரைமட்டுங் கொள்ளலும் தீயோரைத் தள்ளலும் செய்யாமல் எல்லோரையும் கொள்ளல் தகுதியென்றும் மனத்துட்கொண்டு 'தீயரே யெனினும் உன்னோடுற்றவர் எனக்கும் உற்றார்' என்றானெனலுமாம். தன் மனைவி சீதையைப் பகையரசன் கவர்ந்து மறைத்து வைத்திருக்கு மிடத்தைக் கண்டுபிடித்து அவனை வென்று அவளை மீட்டுதற்கு உதவியாக இராசதந்திரமுறையிற் சுக்கிரீவனைச் சினேகிதனாகக்கொண்ட இராமன் அந்த ராசதந்திரமுறைப்படியே 'தீயரே யெனினும் உன்னோடுற்றவர் எனக்கும் உற்றார்' என்றானெனலுமாம்.

சுக்கிரீவன் 'மாற்றானெனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான்—வேற்றார்கள் திறத்திவன் தஞ்சம் என் வீர' (வாலிவதைப்படலம்-௩௩) என்ற இலக்குமணன் வினவுக்கு விடையாக, இராமன் 'பெற்றாருழைப் பெற்ற பயன்பெறும் பெற்றியல்லால்-அற்றார்நவை யென்றலுக் காகுநர் ஆர்கொல் என்றான்' (ஷ படலம் ௩௫) என்பதனால் மேலே கூறிப் போந்தவை பொருத்தமானவையென்பது போதரும்.

வாலி சுக்கிரீவர் பகைமை வரலாறு.

[இராமன் சுக்கிரீவனுக்குச் சிநேக வாக்களித்ததைத் தெரிந்து, இராமவாக்கு, ஏகவாக்கு, வேதவாக்கினும் மெய்ம்மை மிக்கது என்று வானரசேனை குதுகலித்து ஆரவாரஞ்செய்தது. அநுமான், ஆனந்த பரவசனாயெழுந்து, அஞ்சலியத்தனாய்நின்று, "வாழி! மன்னவர் மன்னவ! நீயும் நின்தோழனும் வாழி!! நீங்கள் இருவீரும் உங்கள் மாளிகையில் இனிது வீற்றிருத்தலை யாங்களெல்லாரும் கண்டுகளிக்க

வேண்டும். திருவுள்ளம் யாதோ?" என, இராமன், நல்லதென்று, இலக்குமணனோடும் சுக்கிரீவனோடும்சென்று, சந்தனம் அகில் முதலிய தருக்கள் நெருக்கமாக உற இடையிடையே பளிங்குப் பாறைகள் விளங்கப்பெற்ற சோலைநடுவேயுள்ள சுக்கிரீவன் வாசஸ்தலத்திலே அவனோடு சல்லாபித்து அளவளாவி இனிது வீற்றிருந்தான்.

பின்பு, இராமன், விருந்தருந்த இருந்தபோது, தனைவியோடன்றித் தனியே உபசரிக்கும் சுக்கிரீவனை நோக்கி "நீயும் மனைவியைப் பிரிந்திருக்கின்றாயோ?" என வினவினான். அப்போது, அநுமான், அவ்வினாவுக்கு அவன் விடை அளிப்பது அநுசிதமென்பதுணர்ந்து எழுந்து அஞ்சலியத்தனாய்நின்று "உத்தமநீதியாய்! உனக்கு உரைப்பது ஒன்று உண்டு. உற்றுக்கேட்டருள். வாலி மகாபலசாலி. கயிலாயபதியின் கருணைத்துறையில் முழுகித் திளைப்பவன். தானவர் பெருங்கூட்டமும் வானவர் பெருங்கூட்டமும் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தும் முயன்று பார்த்து முடியாதெனக் கைவிட்ட அமுதமதனத்தைத் தானொருவனே தனியாகச்செய்து முடித்த திறமையுடையவன். தன்னை எதிர்த்தார் பலத்திற் சரிபாதி தன்னை அடையத் தைவிக* வரம் பெற்றவன். காற்றினும் கடுவேக முடையவன். அவன் மார்பில் அறுமுகன்வேல் செல்லாது. அவன் வால் செல்லாத இடத்தேதான் இராவணன் கோல் செல்லும். ஏனெனில், அவன் சிவபூசைசெய்துகொண்டிருந்தபோது கரவாகப் பின்புறத்தே சென்று பற்றமுயன்ற இராவணனை எளிதாகப் பிடித்து வாலிற்கட்டி இலகுவாகத் தூக்கிக்கொண்டு எங்குஞ் சஞ்சரித்த காலத்தில், வாலி வால் செல்லாத இடமுமில்லை; இராவணன் இரத்தம் சிந்தாத இடமுமில்லை. ஆதிசேடன் கிடந்து தாங்கும் பூமியை நடந்து தாங்கும் ஆற்றலான்.

அந்த வாலி எங்கள் அரசனாக, இந்தச் சுக்கிரீவன் இளவரசாக இருந்தகாலத்தில், இவர்களுடைய குலப்பகைஞனான மாயாவி யென்ற அசுரன் வந்து வாலியோடு போர்புரிந்து வாலி தாக்குதலுக்கு ஆற்றாது தோற்றோடிப் பாதாளத் துள்ளே புகுந்தான். அப்போது, வாலி சுக்கிரீவனைப் பிலத்துவாரத்தில் நிறுத்தி, 'அவனைப் பிடித்துவருவேன். நீ சிறிதுபோது இங்கே காத்திரு' என்று சொல்லிவிட்டு உள்ளேபோனான்.

* தைவிக-தெய்வீக.

போனவன் நெடுங்காலம் திரும்பாமையால் கலங்கிக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த இவனை நோக்கி மந்திரிமார் முதலியோர் 'உன் தமயன் இறந்தமையால் அரசுபுரிதல் உனது கடமை' என, 'அது தவறு யான் உள்ளே சென்று அவனைத் தேடிக் கண்டு கூட்டிவருவேன். அவன் கொல்லப்பட்டிருந்தால், கொன்றவனைக் கொன்றுவருவேன். கொல்ல முடியாவிட்டால், இறந்துவிடுவேன்' என, 'எங்களை நீ காவாயாயின், யார்காப்பார்? நீ காக்கக்கடவை' என்று வற்புறுத்தி அரசாட்சியை இவனிடம் அவர்கள் கொடுத்ததுண்டு. இவன் (மனசோடு) கொண்டதில்லை.

இவன் காத்திருந்த பிலத்துவாரவழியே மாயாவி வந்துவிடாமல் தடுக்க மலைகளை அடுக்கி அடைத்துவிட்டு, இவனைக் கூட்டிவந்து, இறைமைவகிக்கச்செய்து எங்கள்மலையில் யாங்கள் இருக்கையில், வாலி மாயாவியை மடித்துப் பாதாளவாயிலை அடுத்துத் தம்பியை விளித்துப் பிரதியுத்தரம் பெறாமையால், 'தம்பி காத்த தன்மை நன்றாயிருந்தது!' என்று எண்ணி, அடுக்கிய மலைகளை உதைக்க, அவைகள் நெடுந்தொலை பறந்தொழிந்தன. அவன் கோபத்தோடு எங்கள் மலைமேல் ஏறிவர, இவன் எதிர்கொண்டு சென்று அடிபணிந்துநின்று, 'மந்திரிகள் முதலியோர் வற்புறுத்தலை மறுக்கமாட்டாது, உன் காவலை யான் புரிந்தேன். என் பிழைபொறுத்து உன் காவலை ஒப்புக்கொள்' என்றதை ஏற்றுக்கொள்ளாமல், சீற்றம் மிகுந்து, இவனைத் தாக்குவானாகிக் கடல் கடைந்த காதலங்களாற் குடல்கலங்க உடல்கடைந்திட, இவன் உலைந்து, இனி நின்றிடில் உயிர் சென்றிடுமென்று உலகமுடிவுவரையும் விரைந்தோடியும் அவன் தொடர்ந்தோடிப் பற்றி மாய்க்கப் புக்கபோது, அற்றம் வாய்க்கப்பெற்றுத் தப்பிப் பிழைத்து, அவன் வாராமல் தடுக்கும் சாபக் காப்புடைய இந்த மலையில் வந்து தங்கி யிறவாதிருக்கின்றான்."]

வாலி கொடுமையும் சுக்கிரீவன் துன்பமும்.

௪௧௧ "உரிமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமருந்தையும் அவன்விரும்பினான்
இருமையுந்துறந் திவன் இருந்தனன்
கருமம் இங்கிதே கடவுள்" என்றனன்.

இ - ள். "தவாமீ! (வாலி, சுக்கிரீவனுடைய செல்வத்தைக் கவர்ந்ததோடமையாமல், பொதுவாக உடையவனுக்கும் அவன் உறவினர் முதலியோர்க்கும் உரிமையாம் செல்வம்போலன்றிச் சிறப்பாக உடையவனொருவனுக்கே உரிமையாதல்பற்றி) உரிமை யென்று (பெயர்)

வழங்கப்பெற்று இவனுக்கு உரிமையாயுள்ள மனையாளாகிய ஆரமுதம் போல்பவளையும் அவன் காதலித்(துக் கவர்ந்)தான். (செல்வமும் மனைவியும் ஆகிய பொருள்கள்) இரண்டையும் (ஒருசேர) இழந்து, இவன், (துன்பம் மிகுந்தவனாய்) இருக்கின்றான். இந் நாட்டில் (இவன் விஷயமாக நடந்த) செய்தி இதுவே."

உரிமை - மனைவி. இவற்கு - இவனுக்கு. தாரம் - மனைவி. மருந்து - அமிர்தம். "விரும்பினான் - காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது." இருமை - இரண்டு (குறள் உ௩ உரை). துறத்தல் - நீக்குதல். கருமம், காரியம், செய்தி, வரலாறு, சங்கதி என்பன ஒருபொருள் குறிப்பன. கடவுள், அண்மைவிளி; பெரியாரை மரியாதையாகச் 'சுவாமி' யென விளித்தலை உணர்த்திநின்றது. உருமை யென்பதும் பாடம். ருமை சுக்கிரீவன் மனைவியின் பெயர். 'ரோமம்' உரோமம் எனப்படல் போல, 'ருமை' உருமையெனப்பட்டது.

கங்கைப்படலம் ௩அ-ம் கவியில், குகன் இலக்குமணனை நோக்கிச் சுவாமியே என்ற மரியாதைவிளிப்பொருள்படத் 'தேவா' என்றது போல, இங்கே அநுமான் இராமனைநோக்கிக் 'கடவுள்' என்றான்.

அருமருந்தையும் என்பதில் உள்ள உம்மை, ஒருபொருளுங் குறியாது ஓசைநிரப்புவதாகக்கொண்டால், அசைநிலையாம்; மனைவியின் சிறப்பை யுணர்த்துவதாகக்கொண்டால், உயர்வுசிறப்பும்மையாம்; 'செல்வத்தைக் கவர்ந்ததல்லாமல்' என்பதை வருவித்தால், இறந்தது தழீஇய எச்சவும்மையாம்.

வாலிக்குச் சுக்கிரீவன் தம்பியாயினும் குடியென்பதனாலும் குடிகளின் உடைமைகள் அரசன் உடைமைக ளென்பதனாலும் இவன் செல்வத்தை அவன் கைப்பற்றினானென்ற போலிநியாயம் ஒருபுறமிருக்க, அவன் பாதாளத்துள்ளிருந்த தன்னை வெளியே வரவொட்டாமற் கனத்த மலைகளாற் பிலத்துவாரத்தை அடைத்துத் தன் இராச்சியத்தை இவன் தீய கருத்துடன் கைக்கொண்டானென்று எண்ணியது உண்மைக்கு மாறாயினும், அவ்வெண்ணக்காரணமாக அவன் இவன் செல்வத்தைப் பறித்துக்கொண்டதனால், அச்செய்கை அவன் மனமறியச் செய்த அநியாயமாகாதெனினும், அவன் இவன் மனைவியை வௌவியது அநியாயமாகாது போகாதென்பதனை வற்புறுத்த அவன் இவன் பத்தினியை அபகரித்தானென்று வெறுமனே* கூறாமல், 'உரிமையென்றிவற்குரிய' என்ற விசேடணத்தோடுகூடிய தாரத்தைக் கவர்ந்தானென்றான்.

*வெறுமனே - வாளா - சும்மா (பதிற்றுப்பத்து).

அவ்விசேடணவிளக்கம் வருமாறு:— ஓர் அரசனுடைய குடிகளின் பொருள்கள், அவனுடைய பொருள்களென, உண்மையாகவோ உபசாரமாகவோ உரைப்பதுண்டு. ஆயினும், அப்பொருள்களுள்ளே, ஒரேஒரு பொருள்மட்டும், உபசாரமாகவும் அவனுடைய பொருளாகாமல், அவ்வொருபொருளையுடையானொருவனுக்கே உரிமையாம் ஒழிபுவிதிபற்றி 'உரிமை'†யென்று கூறப்படுதல் மரபு அவ்வொருபொருள் மனைவியென்பது கூறாமலே விளங்கும். குறளிற் 'பிறன்மனை' பிறன்பொருள்' என்று கூறப்படுதல் காண்க (குறள் ௧௪௪).

'உருமை' என்ற பாடங்கொண்டாலும், 'உரியதாரம்' என்பதில் உள்ள உரிய என்பது மேலே விரித்துக்கூறிய விசேடவுரைக்கு இடந்தந்து நிற்றல் காண்க.

[வாலி சுக்கிரீவர் வரலாறு கேட்டுக்கொண்டிருந்த இராமன், அவன் இவன்மனைவியைக் கவர்ந்தானென்ற வார்த்தை காதில் வீழ்தலும் கடுஞ்சினங் கொண்டான்]

வாலி அவன் தம்பிமனைவியை அபகரித்தானென்று கேட்டு இராமன் மனம் சகிக்காமல் தபித்தல்.

445 ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றன ளென்ன,
ஆரம் வீங்குதோட் டம்பிக்குத் தன்அர சுரிமைப்
பாரம் ஈந்தவன், 'பரிவிலன் ஒருவன்தன் இளையோன்
தாரம் வெளவினன்' என்றசொல் தரிக்குமா றுளதோ!

இ-ள். (உன் அரசை உன் தம்பிக்குக் கொடு என்று தந்தை சொன்னானென்றல்லாமல், தாய் சொன்னாளென்று மல்லாமல், சிறிய தாயருள்ளும், பாலைவனம்போல ஈரமில்லாத) அன்பற்ற சிறிய தாய் சொன்னாளென்று (சேட்டபுத்திரபாம்பரைப் பாத்தியமாய்த்) தனக்கே உரிமையான இராச்சியத்தைத் தன் தம்பி (பரதனு)க்கு (மனங்களித்து)க் கொடுத்த (சகோதாவாஞ்சைமிக்க இராக)வன் (தன் போலும் தமயன்) ஒருவன் (அவன் தம்பிக்கு) அன்பில்லான் (ஆனமையோடமையாமல் கொடுமைசெய்வானனவழியும் அறக்கொடிய செயலாக) அவனுடைய தம்பிமனைவியை அபகரித்தானென்ற வார்த்தை (யைக் கேட்டுச்) சகித்திருக்குந்தன்மை (அறவே இல்லையாகுமேயன்றி) உள்ளதாகுமோ!

† உரிமை - மனைவி.

ஈரம் - அன்பு. சிற்றவை - சிறு அவ்வை - சிறியதாய் (ஆன கைகேசி). ஆரம் - மாலை. வீங்குதல் - மிகுதல். ஆரம் வீங்குதோள் தம்பி - (பூமாலைகள் இரத்தினமாலைகள் ஆன) மாலைகள் மிகு (ந்தணி) ந்த தோளையுடைய தம்பி யாகிய பரதன்). ஆரம் சந்தனக்குழம்புமாம். பரிவு - அன்பு. நீங்குதோளிளவற்கு மன்னரசு என்பதும் பாடம்.

மந்தரையின் துர்ப்போதனைக் குள்ளாகுமுன் அன்புடையாளா யிருந்த கைகேயி அப்போதனையால் அன்புநீங்கினளென்பது குறிக்க ஈரம் இன்றிய சிற்றவை யென்னாது ஈரம் நீங்கிய சிற்றவை யென்று னென்னலாம். அவள் அன்புநீங்குமுன் தம்பிக்கு அரசைக்கொடு என்று சொல்லியிருந்தாலும் கொடுக்கக்கடவதல்லாத அரசை அன்புநீங்கியபின் கொடு எனக் கொடுத்தது மிக்க பெருந்தகைமை யென்பது குறிப்பு.

இராமன், வாலியைக் கொல்ல அவன் வாழுமிடத்தைச் சுக்கிரீவனைக் காட்டச் சொல்லல்

[இராமன், சுக்கிரீவனைநோக்கி “உலகத்து வீரரெல்லாரும் ஒருங்கு சேர்ந்து அவனுயிரைக் காப்பாரானாலும் அவர்களோடு அவனைக்கொன்று உன் மனைவியை இராச்சியத்தோடும் சேர்த்துத் தருவேன். அவனைக் கொல்ல அவன் இருக்குமிடத்தைக் காட்டு” என்று சொன்னான்]

அதுகேட்டு மகிழ்ந்த சுக்கிரீவன் ஆலோசிக்க அனுமதி வேண்டல்.

446 எழுந்து பேருவ கைக்கடற் பெருந்திரை இரைப்ப,
அழுந்து துன்பத்துக் கக்கரை கண்டனன் அனையான்,
விழுந்த தேஇனி வாலிதன் வலியென, விரும்பா
மொழிந்த வீரற்கியாம் எண்ணுவ துண்டென மொழிந்தான்.

இ - ள். சுக்கிரீவன், பேரானந்த சமுத்திரத்தின் பேரலைகள் எழுந்து ஒலிக்காநிற்க (அவ் வொலி காதில் விழக் கேட்டுக் களித்துக் கண்ணால் தான்) அழுந்திக் கிடந்த (பெருந்) துக்கசமுத்திரத்தின் கரையைக் கண்டான். (கண்டு,) இனி வாலியின் வலிமை அழிந்ததேயாம் என்றெண்ணி, (வாலியைக் கொல்வேனென்று) வாக்களித்த இராமனை நோக்கி, “யாங்கள் ஆலோசிக்கவேண்டுவது (ஆகிய விஷயம் ஒன்று) உளது” என்று சொன்னான்.

இரைத்தல் - ஒலித்தல். ‘அழுந்து’ என முன்னும் ‘அக்கரை’ எனப் பின்னும் வரலால் ‘துன்பம்’ துன்பக்கடலை உணர்த்தியது. அனையான்- அவன்-சுக்கிரீவன். அக்கரை என்பதில் அகரம் தூரப்பொருளைச் சுட்டும் இடைச்சொல். வீரற்கியாம் என்பதில் இகரம் குற்றியலிகரம்.

அம்பு உருவிப்போகவே, என் மனத்துன்பம் (ஒருவிப்) போகும்" என்றான். [விநயம் - மரியாதை; புத்திநுட்பம். ஒருவி நீங்கி]

நெறி - வழி. மாகம் - திக்கு ("மாகம்நீள் விசும்பிடை" சிந்தாமணி 569). நிமிர்தல் - நீளல் (தமிழ்ச்சொல்லகராதி;—நீண்டுவளர்தல். ஆக - ஆகத்தொகை - மொத்தமாய் (தமிழகராதி). ஐந்தினோடு இரண்டு - ஏழு. இடர் - துன்பம். 'உருவ' எச்சத்திரிபாய் 'உருவி' எனப் பொருள்கொள நின்றது. 'உருவ' என்பதற்கு உருவும்படி என்றும் பொருள் கூறலாம்.

இந் நெறி ஏகவேண்டும் எனவும், நீண்டன (ஆன) மாகம் குறுகிட நிமிர்ந்தன (ஆன) மரங்கள் எனவும், நின் அம்பு உருவ எனவும் இயைத்துப் பொருள்கொள்ளப்பட்டிருப்பது காண்க.

'மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள் ஆக ஐந்தினொடிரண்டின் ஒன் றுருவ' என்பதற்குப் 'பெரிய ஆகாயத்தை அளாவி உயர்ந்தவையும் (அவ் வாகாயமும்) சிறியதாம்படி பரந்து வளர்ந்தவையுமாகிய மாமரங்கள் ஏழினும் ஒருங்கு துளைக்கும்படி' என்பது முந்திய உரை. 'மாகம்' என்பது அவ்வுரையில் ஆகாய மென்றும் இவ்வுரையில் திசைக ளென்றும் பொருள்கூறப்பட்டிருத்தல் கவனிக்கத் தக்கது. 'ஒன்று' என்பதற்கு அந்த உரையில் ஒருங்கு என்ற அரும் பொருளும் இந்த உரையில் ஒன்று என்ற செம்பொருளும் கொள்ளப் பட்டிருத்தலும் குறித்தற்குரியது.

முந்திய உரைப்படி ஏழுமரங்களையும் உருவ அம்பெய்யும்படி சுக்கிரீவன் இராமனை வேண்டினவனுயிருந்தால், ஏழுமரங்களும் துளை பட்டபோது, அவனுக்கு உண்டாம் வியப்பினும், இந்த உரைப்படி ஒன்றை உருவ எய்யும்படி வேண்டினவனுயிருந்தால் உண்டாம்வியப்பு மிகப் பெரிதாயிருக்குமென்பது கூறாமலே விளங்கும்.

வான்மீகத்தில் சுக்கிரீவன் இராமனைநோக்கி "நீர் இவ்வாச்சா மரங்களி லொன்றைத் துளைப்பீராகில் உம்முடைய டலம் இவ்வளவென்பதை நான் அறிந்துகொள்வேன்" (பண்டித. நடேசசாஸ்திரியார் வால்மீகி ராமாயணவசனம், கிஷ்கிந்தாகாண்டம் 11-ம் சருக்கம்) என்று கூறியதாகக் கூறியிருத்தல் காண்க. [ஆச்சாமரம்-மராமரம்]

இராமன் ஏழுமராமரங்களினருகே எய்துதல்.

[மேற்கூறியவாறு கூறிய சுக்கிரீவனது உட்கருத்தை இராமன் தெரிந்து, சிறுநகைசெய்து, எய்யச் சித்தமாக வில்லை நாணேற்றி, அந்த மரங்களின் அருகே போய்ச் சேர்ந்தான்.]

நட்புக்கோட்படலம் முற்றிற்று.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

*கம்பருவம நயம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி லின்பத் தழி வில் வீடும் நெறியறிந் தெய்தவும், ஒருவர் கருத்தினை யொருவர் அறிந்து சமூகவாழ்க்கை மேம்பட்டுத் தழைப்ப இவ் வுலகியலைச் செவ்விதி னடாத்தவும் துணைபுரிந் தின்றியமையாது நின்றுநிலவுவது பாஷை யென்ப தொருதலை. ஆகவே, அப் பாஷையைக் கற்பதான் மக்க ளறிவு வளர்ந்து, அறம் பொருள் இன்பமென்னும் வடுவிலாவையத்து மன்னிய மூன்றுங் கெடுதலின்றி யெய்திப் போகமென்னு மேகமாகிய கனியை யினிது நுகர்வதோடு, இறுதியில் வீடென் றுரைக்குங் கேடில் பதமும் பெறுவரென்பது முடிந்தது. உத்தமநாடென்ப தெத்தகை மாட்சிய தென்பதற் கோர் காட்டாகத்தக்கதாகக் கோசலநாட்டை வருணித்துவந்த கம்பரும், அத்தகைச் சிறப்பிற்குக் காரண மாராயப் புக்கு, இறுதியில் விளக்குவதோ ரினியசெய்யு ளீண்டு நினைக்கத்தகும். அது வருமாறு:—

'ஏகம்முதற்கல்விமுளைத்தெழுந்தெண்ணில்கேள்வி
யாகம்முதற்றிண்பணைபோக்கியருந்தவத்தின்
சாகந்தழைத்தன்பரும்பித்தருமம்மலர்ந்து
போகங்கனியொன்றுபழுத்ததுபோலுமன்றே.'

(நகர – 75)

அன்னதோர் நன்னலங் கெழீஇய கல்வியைப் பயில்வதற்குத் துணையாகும் நூல்களுட் காப்பியமென்ப தொன்றும். ஒவ்வொரு

---

*இது, மதுரைத் தமிழ்ச்சங்க நிர்வாகசபை அங்கத்தினரும், இராமேசுவரம் தேவஸ்தானம் ஸம்ஸ்க்ருத பாடசாலையின் பிரின்ஸ்பாலுமாகிய ப்ருஹ்மஶ்ரீ V. S. இராமஸ்வாமி ஸாஸ்த்ரிகள், B.A., B.L., அவர்கள் தலைமையில் நிகழ்ந்த ஷை சங்கக் கலாசாலை மாணவர் ஞானபிவிருத்திசபையின் இருபத்தாறுவது வருடக்கொண்டாட்டத்தில் ஷை கலாசாலை மாணவர் ஜெ. நாராயண சுந்தரம் என்பவரா லெழுதிப் படிக்கப்பட்டது.

பாஷையிலும் உயர்ந்த எண்ணங்கள் பொதிந்து, பல்வகை நீதியைப் புகட்டி, நாற்பொருள்பயக்கும் நடைநெறித்தாகி, மலை, கடல், நாடு, வள நகர், பருவம், இருசுடர்த்தோற்றம், நன்மணம்புணர்தல், பொன்முடி கவித்தல், பூம்பொழினுகர்தல், புனல்விளையாடல், தேம்பிழிமதுக்களி, சிறுவரைப்பெறுதல், புலவியிற்புலத்தல், கலவியிற்களித்தல் முதலிய இன்னோரன்ன வருணனைகளா லகங்குளிர்வித் தறிவை வளர்த்துச் சந்தியிற் றொடர்ந்து, பெருகிய சுவையும் பாவமுங் கொண்டு, தன்னிக ரில்லாத் தலைவன்சரிதங் கூறுமுகத்தா னன்னெறிகாட்டி, நல்லியல் வழாத நல்லிசைக்கவியாற் செய்யப்பட் டுண்மைச் செல்வமெனப் போற் றப்படுங் காப்பியங்களே துறக்கச்செல்வமு மடங்கும் பெருஞ்செல்வத் தான் வரு மின்பத்தினும் பேரின்பந் தந்து நன்னெறிச் செலுத்து மென்பது நுண்மா ணுழைபுல மிக்காரது துணிவு.

> 'இம்பர்நாட்டிற்செல்வமெலாமெய்தியரசாண்டிருந்தாலு
> மும்பர்நாட்டிற்கற்பகக்காவோங்குநீழலிருந்தாலுஞ்
> செம்பொன்மேருவனையபுயத்திறல்சேரிராமன்றிருக்கதையிற்
> கம்பநாடன்கவிதையிற்போற்கற்றோர்க்கிதயங்களியாதே.'
>
> (கம்ப – தனியன் – 8)

> 'காதைகள்சொரிவனசெவிநுகர்கவிகள்'
>
> (ஷை – நாட்டு – 51)

> 'பொன்னின்சோதிபோதினினாற்றம்பொலிவேபோற்
> றென்னுண்டேனிற்றீஞ்சுவைசெஞ்சொற்கவியின்பம்'
>
> (ஷை – மிதிலைக்காட்சி – 23)

என்னு மான்றோர் வாக்குகளை நோக்குக. 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞராற் செய்யப் பட் டுள்ளும் புறமுஞ் சுவையுடைத்தாய வுயர்ந்த செய்யுட்கள் உலகைத் தம்வச மீர்க்கு மென்பதை ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் (Shakespeare) நாடகங்கள் தலைபெடுக்கவும், பலரும் கூடிப்போர் கண்டு மகிழ்வதை யொழிந்து கவிதானுபவத்திற் றிரும்பிவிட்டன ராகலி னந்நாடகங்களை யொழிக்கவேண்டுமென எலிசபெத் (Elizabeth) மஹாராணியிடம் கூடிக்கூட்டத்தலைவன் குறைபிரந்ததாக ஸர் வால்டர் ஸ்காட் (Sir Walter

Scott) என்னும் மேனாட்டுப் புலவரொருவர் *கெனில்வொர்த் (Kenil Worth) என்னு மாங்கில நூலிற் கூறியவாற்றானும் அறியலாம். அணியியல் வல்லுநராகிய சிவப்பிரகாசசுவாமிகளுந் தம் வெங்கையுலாவில்,

'சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழப் புதவணித்தா—மூந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்.'

என மஹாகவிகளாற் செய்யப்படுங் காப்பியங்களைத் திறமையமைந்த சிற்பிகளாற் செய்யப்படுங் கோயிற் குவமித்துச் சிறப்பித்தனர்.

இவற்றை யியற்றுஞ் செந்நாப்புலவர் இறைவன்போ லகடிதகடனா சாமர்த்தியம் வாய்ந்தவ ரென்றுங் கூறலாம்.

இத்தகைய மஹாகாவியங்களை யியற்றித்தந்து என்றும் பொன்றாப் புகழுடம்போடு நின்றுநிலவும் மஹாகவிகள் திருவள்ளுவர், திருத்தக்கதேவர், இளங்கோவடிகள் முதலிய தென்மொழியாளரும், வான்மீகி பகவான், காளிதாசர் முதலிய வடமொழிவாணரும், ஹோமர், விர்ஜில், மில்டன், முதலிய மேனாட்டினரும் முதலானோரெனக் கூறுவர். அமிழ்தினு மினிய தமிழெனுந் தாயிடத்துந் தமிழ்நாட்டிடத்தும் போன்பு பூண்டு, தம் கூரறிவால், 'இராமாயணத்தி னிகழ்ந்திடு கதைகடம்மி—லொன்றினைப் படித்தோர்தாமு முரைத்திடக்கேட்டோர்தாமு—நன்றிதுவென்றோர்தாமு நாகம தெய்திடாரே' என்றும், 'மாக்கதை' என்றும், 'ஸீதாயாஶ்சரிதம்மஹத்' என்றுஞ் சிறப்பிக்கப்பட் டொப்புயர்வற விளங்கு மிராமாயணமென்னு மிதிகாசத்தைப் பெருங்காப்பியமாகச் செய்துதந்து கொடையிற் சிறந்து வள்ளலென்றுங் கவியிற் சிறந்து கவிச்சக்ரவர்த்தி யென்றுங் கொண்டாடிக் கற்றோர் புகழுங் கொற்றம் வாய்ந்த மஹாகவி கம்பரென்ப தனைவர்க்கு மொப்ப முடிந்தது. கல்விப்பெருமிதமும், கவனசக்தியு மிக்குத் தமிழகத்தின திலகமெனத் திகழ்ந்த இம்மஹானைச் சமயப்பெரியோ ருள்ளிட் டனைவரு மோர் மஹாகவியாகவே கொள்வர். வைணவப்பெரியாரு ளொருவராகிய சீயர் 'தீவினை தீர்வம்—வேண்டினுடொழுதென்று விளம்புவாய்' (கம்ப—சூளா

*Chapter XVII.

மணி-35) என்ற இவர்வாக்கைத் 'தலைமகள் தலையாலே வணங்கும்' என்ற திருவாய்மொழி வ்யாக்யானத் தரும்பதவுரையி லுதகரித்துச் சென்றமையும், மற்றொருவராகிய பெரிய சீயர் 'சுரக்குந் திருவும்' என்னு மிராமாநுச நூற்றந்தாதி 43-ம் பாசுர வ்யாக்யானத்தில் 'என் முடியாதெனக்கியாதேயரியது' என இவர் ஆழ்வார் நூற்றந்தாதி 29 ம் பாசுரத்திற் கூறியதை யுதகரித்து மஹாகவிப்பிரயோக மெனச் சுட்டிச்சென்றமையும் நோக்குக. சில மேனாட்டினரும் இவர் காப்பியத்தைக் கண்டு வியப்படைந்திருக்கின்றன ரென்ப. இவரை மேற் கூறிய மஹாகவிகளோ டொப்பா ரென்று சிலரும் அவர்களினும் மிக்கா ரென்று சிலரும் கூறுவர்: எங்ஙனமாயினும் இவர் ஒரு மஹாகவி யென்பதில் மதபேதமின்று.

முன்னுள்ள காப்பியங்களைச் சீர்திருத்திப் பின்வருவனவற்றிற்கு வழிகாட்டித் தமிழ்க்குற்றமெல்லாம் அராவும் அரமாயும், தமிழ்த்தாயின் காப்பியமாலையிற் றலைசிறந்த நாயகமணியாயும் விளங்கும் இவரது இராமாயண காவ்யரஸமும், கவிஹ்ருதயமும் எட்டுணையு மறியாத ஏழையேன் ஆசைபற்றி அன்பெனும் நறவம்மாந்தி மூங்கையான் பேசலுற்றானென்ன மொழியலுற்றே னாதலிற், பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பன்னப்பெறுபவோ வென்னும் நியாயம்நோக்கி யறிந்த வான்றோரைப் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டு, கல்வி கேள்விகளிற் சிறந்தார் கவிநயத்தால் ஒப்பற்ற காப்பியமாகக் கருதும் இதனுட் காணப்படும் உவமைகளின் நயத்தைக் காண்பதற்கு ஸ்தாலீபுலாகநியாயமாகச் சில காட்டுவதாகிய எடுத்துக்கொண்ட விஷயத்திற் சிற்றறிவிற் கெட்டியமட்டிற் சிறிது பொழுதுபோக்கிச் செல்வல்.

முன்னூல்களிற் கண்ட முடிபுகளைத் தந்நூலிலேற்றவாறு விரித்து நயம்படவுரைப்பது நங் கவிச்சக்ரவர்த்திக் கியல்பாகலின் அவ்வாறே ஆன்றோரான் அடிப்பட இன்னின்ன பொருள்கட் கின்னின்ன பொருள்களுவமையென வழங்கப்பட்டு வரும் மரபின் வழாது ஏற்ற விடங்களிலெல்லாம் அவ்வுவமைகளையே மேலும் பொதுத்தன்மைகள் கூட்டி, வேண்டியவாறு விகற்பித்து விரிப்பது இம் மஹாகவியின் உவமத் திறத்தை விளக்குதற்குத் தக்கதோர் சான்றாகும்.

உதாரணமாகச் சக்ரவர்த்தித்திருமகனார் தன்னிழலேயன்ன தம்பியொடும் கோசிகமுனிவன்பின்னே பல்வளம்பழுநிய பதியாகிய மிதிலாநகரத்து வீதியிற் செல்லும்பொழுது, அலகிலா அந்தணரும், அறக்கடவுளும், உலகும், உம்பரும் ஒருங்கே நோற்ற தவப்பயத்தாற் சானகியாக அவதரித்திருந்த பிராட்டியார், கன்னிமாடத்திற் ருதியர் புடைசூழ அவர் முன்னே தூவிய மொய்ம்மலர்மேற் பூவிற் பொன்போலொதுங்கிச் சதகோடி மின் சேவிக்க மின்னா சென்னும்படி, குன்றும், சுவரும், கல்லும், புல்லும் கண்டுருகப் பெண்கனியென்னநின்றாளைக்கண்டு காமுற்றுத் தன்னைக் கண்டு காமுற்ற அவள் சிந்தையும் நிறையும் கவர்ந்துசென்று தமக்கமைந்ததோர் மாகமாடத்து வைகியஞான்றிரவில், தனியுந் தானும் அத்தையனுமாயிருக்கும்வேலை யிரங்கிக் கூறுவதாகக் கூறுவதோரினியசெய்யு ளிதனை விளக்கும். அது வருமாறு:—

'வள்ளற்சேக்கைக்கரியவன்வைகுறும்
வெள்ளப்பாற்கடல்போன்மிளிர்கண்ணிணை
எள்ளற்பூமகளாகுங்கொலோவென
துள்ளத்தாமரையுள்ளுறைகின்றதே.'

(மிதிலைக்காட்சி – 141)

[அகத்துநிகழ்கருத்தைப் புறத்தே காட்டித் தனக்கிலக்காயினரைத் தன்வயமாக்குஞ் சிறந்த வுறுப்புக் கண்ணென்ப தான்றோர் துணிபு.

'நாட்டமிரண்டுமறிவுடம்படுத்தற்குக்
கூட்டியுரைக்குங்குறிப்புரையாகும்'

(தொல்–பொருள், 96.)

என்ற ஆன்றோர் சூத்திரமும்,

'நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.'

(திருக்குறள்–710.)

என்ற வள்ளுவர் வாக்கும், 'இங்கிதம், வடிவு, தொழில், செயலென்பன முதலாகப் பிறர்கருத்தளக்கு மளவைகள் பல: அவையெல்லா முன்னறிந்தவழி யவரான் மறைக்கப்படும்: நோக்கம் மனத்தொடு கலத்தலான் ஆண்டு மறைக்கப்படாதென்பது பற்றி யதனையே பிரித்துக் கூறினார்.'

என்ற பரிமேலழகர் விசேடவுரையுங் காண்க. அதனு லவளை நினைந் திரங்கும் மாயன் காமுற்ற தனக் கவள் காமுற்றவாற்றைத் தெரிவித்துத் தன்னை யவள்வயமாக்கி, அவ ளணையாமையால் விடம்போல வெம்மை யும், உருவெளித்தோற்றத்திற்றோன்றி அமுதம்போலத் தண்மையுஞ் செய்வதாய கண்ணையெடுத்து விசேடணமாக்கி யுரைப்பதாகக் கூறினர்.

'எண்ணருங்குணத்தினளிளையணின்றுழிக்
கண்ணொடுகண்ணிணைகவ்வியொன்றையொன்
றுண்ணவுநிலைபெறா துணர்வுமொன்றிட
வண்ண லுநோக்கினனவளுநோக்கினள்.'

(மிதிலைக்காட்சி-35.)

'பருகியநோக்கெனும்பாசத்தாற்பிணித்
தொருவரையொருவர்த முள்ளமீர்த்தலால்
வரிசிலைக்குமா னும்வாட்கணங்கையு
மிருவருமாறிப்புக்கிதயமெய்தினர்.'

(ஷ 37.)

என முன்னுரைத்தவாற்றா னவர் கண்ணாற் கருத்துணர்ந்து காமுற்ற வாறு விளக்கும். இதனு லொத்தகாமம் வெளிப்படும்.]

பிறழ்ச்சியும் குளிர்ச்சியும் அகற்சியும் உடைமையானும் வாட்டந் தரும் நஞ்சும் தழைவைத்தரும் அமுதும் போலும் இருநோக்குடைமை யானும் பெண்களுடைய கண்களுக்குக் கடல் உவமையாகும் அடிப்பட்ட மரபையும், பாலிற்பதித்த கருமணியை யுவமித்து,—

'சேலனையசில்லரியகடைசிவந்து கருமணியம்
பாலகத்துப்பதித்தன்னபடியவாய் முனிவரையு
மாலுறுப்பமகிழ்செய்வமாண்பினஞ்சுமமிர்தமுமே
போல்குணத்தபொருகயற்கண்செவியுறப்போந்தகன்றனவே.'

(சீவக. 167)

என்று கூறிய ஆன்றோர்வாக்கையும் அறிந்த நங் கவிச்சக்ரவர்த்தி மீண்டுப் பிராட்டிகண்களுக்குச் சாதாரணக்கடலையன்றிப் பாற்கடலை யுவமை கூறினர்.

பிறழ்ச்சியும் அகற்சியுமாகிய வெல்லாக்கடற்குஞ் சாதாரணமான பொதுத்தன்மையுடையதாதன்மேலும் குளிர்ச்சியின் மற்றவற்றிற் சிறந்து, அவற்றினும் கண்டோருள்ளங் கவர்வது பாற்கடல். ஆகவே, இவ்வுடைமையோடு, விடமும் அமுதுங் கொடுத்தல் சாதிப்பெயர்பற்றி யேனைக்கடல்கட் கேற்றியுரைக்கப்படுவதுபோலன்றி அது தனக்கே யுரித்தாகவுடைமையும், *இராகவ னிவள்கண்ணிற் றங்குதற்கேற்பத் திருமால் தன்கட் டங்குதலுமாகிய வின்னோரன்ன அசாதாரணமான பொதுத்தன்மையுடைமையுந் தோன்றப் பாற்கடலை யுவமைகூறுவதாகக் கூறியது எத்துணைப் பொருத்தமுடைத்தாகக் காண்கின்றது! அன்றியும் பிராட்டியின் கண்களுக் குவர்க்கடலை யுவமித்தல் தகாதென்று கவி கருதியவாறுமாயிற்று, பாற்கடலைக் கண்டமாத்திரமே யின்பெய்தச் சோகந் தணியுமாறுபோல, இவள் கண்களைக் கண்டமாத்திரமே குறிப்பு வெளிப்படுதலானு மழகானுஞ் சோக மேக வின்பெய்துவதுமாயிற்று. திங்களுந் தென்றலுங் கலவைச்சாந்துங் கடலு முதலான சிருங்கார காலத்தி லின்பத்தை மிகுக்கும் பொருள்களெல்லாந் துணைவரைத் தணந்தகாலத்துத் துன்பத்தைச் செய்து விரகத்தை மிகுப்பனவாகலி னின்பஞ்செய்யுங்கா லேனைக்கடலின்மிக்குச்செய்யு மிக்கடல் துன்பஞ் செய்யுங்காலு மவ்வாறே யேனையவற்றின் மிக்குச்செய் தொருபால் விரக தாபத்தையும் வளர்ப்பதாயிற்று. பாற்கடலாற் றிருமால் திருமகளை யடைந்ததுபோ லிக்கண்களா லிராகவன் சானகியையடைவதுமாயிற்று.

இன்னும், வடிவானும் பாற்கடலைக் கூறியது பெரிதும் பொருத்த முடைத்தாகிறது. என்னை? கரியவனென்பது கிருஷ்ணனென்பதன் மொழிபெயர்ப்பாகக்கோடல் சாலும். கிருஷ்ணனென்ப தப்பொருட் டாதலே, யதன் றிரிபாகிய கண்ணனென்பது,

'கண்ணன்றன்னிறந்தன் னுள்ளக்கருத்தினைநிறைத்து மீதிட்
டுண்ணின் றங்கொடிகளோடியுலகெங்கும்பரந்ததென்ன
வண்ணஞ்செய்கூந்தற்பாரவலயத்து மழையிற்றேன்றும்
விண்ணின் றமதியின்மென் பூஞ்சிகழிகைக்கோதைவேய்ந்தார்.'

(கம்ப. கோலங்காண் – 4.)

---

* இராகவன் றிருமாலி னவதாரபுருடனாதல் காண்க.

'கருங்கடைநெடுங்கண்ணொளியாறுநிறைகண்ணப்
பெருங்கடலின்மண்டவுயிர்பெற்றினிதுயிர்க்கு
மருங்கலனணங்கரசியாரயிர்தனைத்து
மொருங்குடனருந்தினரையொத்துடறடித்தாள்.'

(கம்ப. கோலங்காண்-38.)

'எண்ணரும்பெரும்படைநாளையிந்நகர்
நண்ணியபொழுதத்துநடுவணங்கைநீ
விண்ணுறக்கலுழன்மேல்விளங்கும்விண்டுவிற்
கண்ணனையென்னெடுவெரிநிற்காண்டியால்.'

(ஷை சூளாமணி-72.)

என்ற இடங்களில் அப்பொருள்குறித்துவந்த தமிழ்நூல்வழக்கானும் உணர்க. அக்கரியவன் கண்ணிற்காணும் பாவைக்கு வடிவானும், நடுவே விளங்கலானும், அழகுசெய்தலானு முவமை.

'கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.'

(திருக்குறள்-1123.)

'திருமணிகுயின்றசெம்பொற்றிருந்துபூங்கொம்பனுடன்
கருமணிப்பாவையன்னான்கரந்துழிக்காண்டல்செல்லா
ளெரிமணிவிளக்கமாடத்திருளறுகாறுமோடி
யருமணியிழந்தோர்நாகமலமருகின்றதொத்தாள்.'

(சீவக-1508.)

எனவருவனவற்றாற் கண்ணிற் பாவைதோன்றுவதும், அதை அருமைப் படவெடுத் துவமிக்குங் கவிமரபுங் காண்க. பாற்கடற்குச் சிறப்புக் கொடுத் தாண்டிருக்குங் கண்ணன்போலக் கண்ணிற்குச் சிறப்புக்கொடுத் தீண்டுத்தோன்றுவது பாவை. பாவை பொழிவது பார்வை யொழிந்த விடத்தாகப் பாவை செத்துவிட்டதெனக் கண் பழிக்கப்படும் வழக்குங் காண்டும். இப்பாவையைக் கிருஷ்ணனென்பதூஉம் வழக்கு. கண்ணன் அஞ்ஞானிகள்கண்ணிற் புலப்படாமையும், தன்னிடத்தே சிந்தையை வைத் திடுபட்ட ஞானிகள்கண்ணிற் புலப்படுதலும் உடையனென்ப. அதுபோலவே மிகநுண்ணிதாய கண்ணிற் கிருஷ்ணனும் உருவெளித்

தோற்றத்திற் புலப்படுதல் மிகவரிதாய், மிகஈடுபட்டவனுக்கே யெளி தாகும். இங்ஙனமாகவே யிராமபிரா னீடுபாட்டையுங் காட்டியவா றாயிற்று. இன்னோன்ன தன்மைகளா லிவ்வுவமைசாலப் பொருந்துவ தொன்றாகும். கடலினடுவண் மண்டலமாக வைகுங் கட்செவியாசு கண்ணினடுவட் காணப்படும் வட்டமான கருமணிக் குவமையாகும், அதனைச் சுற்றியுள்ள வெண்பாகத்திற்குச் சேடனைச்சுற்றி மாடுற விளங்கும் வெண்ணிறப் பாற்கட லுவமைபாகும். இவ்வாறு வண்ண மும் தொழிலும் வடிவும் முதலியபற்றி, இத்துணைச் சுவையும் நயமும் அமைத்து ஒருவமையுரைத்துச்சென்ற கம்பசித்திர மெவர்க்கே வியப் பொடு மகிழ்ச்சியை விளைக்காது? 'பாற்கடல்போல்மிளிர்கண்ணினள்' என்ற நயம்பட்ட பிரயோகம் பெரிது மின்பம்பயப்பதொன்றும்.

அப்பெற்றியே, ஆடவரும் பெண்மைபவாவும் வடிவழகனை இராகவன், மங்கையர்க் கினியதோர் மருந்தாய் அழகு தவஞ்செய்து பெற்ற சானகி நின்ற கன்னிமாடத்தின்மருங்கே சற்று நின்றுசெல்லவும், அவனைக்கண்டு காமுற்றவள் விரகமிக்குத் தளருவதாகக் கூறுமிடத்து,

'நிழலிடுகுண்டலமதனினெய்யிடா
வழலிடாமிளிர்ந்திடுமயில்கொள்கண்ணினள்
சுழலிடுகூந்தலுந் துகிலுஞ்சோர்தாத்
தழலிடுவல்லியேபோலச்சாம்பினள்.'

(மிதிலைக்காட்சி—43.)

'கம்பமில்கொடுமனக்காமவேடன்கை
யம்பொடுங்குழைவதோர்மயிலுமன்னவள்
வெம்புறுமனத்தனல்வெதுப்பமென்மலர்க்
கொம்பெனவமளியிற்குழைந்துசாய்ந்தனள்.'

(ஷை — 49.)

'அருகினின்றசைக்கின்றவாலவட்டக்கா
லெரியிணைமிகுத்தலாலிழையிற்கோத்தநூல்
கரிகுவதீகுவகனல்வகாட்டலா
லுருகுபொற்பாவையுமொத்துத்தோன்றினள்.'

(ஷை — 52.)

எனச் சிருங்காரரஸங் கூறுமிடத்தில் மகளிர்க்குக் கூறும் மரபான வுவமைகளையே அதன் மறுதலையான சோகரஸங் கூறுமிடத்தினு மேற்ற வாறு கூட்டியுரைத்தமையு மிவர்திறமையை விளக்கும். சிருங்காரமாய் விளங்கியகாலத்து வல்லிபோலும், மயில்போலும், மலர்க்கொம்புபோலும், பொற்பாவைபோலும் விளங்கியவள், சோகமெய்திய இப்பொழுது தழ லிற்பட்டுச் சாம்பும் வல்லிபோலும், அம்புதைத்தழுங்கும் மயில்போலும் வெப்பங் கதுவக் குழையும் பூக்கொம்புபோலும், அழலிற்பட்டுருகும் பொற்பாவைபோலு மாயினளென்றவாறு. மலர்க்கொம்புபோ லவள் விளங்கியகாலத்து மலர்போல் விளங்கிய அவயவங்களும் அணிகளும், அதுபோ லவள் குழைந்தபொழுது அம்மலர்போ லவையுங் குழைந்தன வென்க. ஏனையவற்றையும் இவ்வாறே விரித்துக்காண்க.

அம்மட்டோ! ஓரிடத் தவ்வாறு கூறியதுடனமையாது பின்னும் பலவிடங்களிலு மவ்வுவமையையே விரிப்பதூஉம் பாக்கக் காண்டும். இராகவனுக்கு முடிசூட்ட மந்திரக் கிழவருட னாலோசிக்குமாறு மந்திரா லோசனைஸபையை யடைந்த தயரதன், உடன்வந்த கொற்றவர், சுற்றத் தார், நட்பினர் முதலியோரைப் பெயர்கென முகமன்கூறிப் பரிவினீக்கி,

'ஒக்கநின் றுலகளித் தியோகினெய்திய
சக்கரத்தவனெனத் தமியனாயினன்.'

(மந்திர — 3.)

என்றார். இறை, உலகபாலருருவாய்நின் றுலகங் காத்தலிற் றிகிரி வேந்தரை ஆழிக்கையனாகிய திருமாலோ டொப்பக் கூறுதல் மரபென் பது, 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென் னும், (திருவாய்மொழி — 4 — 4 — 8) என்று பெரியார் பணித்தலானும் அறிதும். அப்பொழுவான தர்மத்துடனமையா திவ்விடத்திற் கேற்ப 'யோகினெய்திய சக்கரத்தவனெனத் தமியனாயினன்' என வோர் விசேட தர்மமுங் கூட்டியுரைத்த வாசிரியர், பின் னவனேவலான் மந்திரக்கிழவர் வந்து சுற்றுதற்கு யோகினெய்திய சக்கரத்தவனைக் கடல்சுற்றிவிளங்கு வதுபோலுமென் றுவமைகொள்ளுமாறு, அவர்சுற்றுதற் கலையோடு கூடிய கடலையுவமித்து, 'மறிதிரைக் கடலென வந்து சுற்றினர்.' (மந்திர — 11) எனவும் உரைத்தது இதற்கோர் காட்டாகும். இறைவன் யோகினெய்துதல் உலகளித்தற்கேயாதல்போல் இவனெய்தியதும்

அதற்கேயாம். என்னை? தனைய ரின்மையிற் றளர்வுற்ற தயாதன் தனக்குப்பின் வையக மறுகுமென மறுக்கமெய்தி, அதுதீருமாறு முயன்று, 'முன்னை யூழ்வினைப் பயத்தினு முற்றிய வேள்விப் – பின்னை யெய்திய நலத்தினு மரிதினிற்பெற்ற' குரிசிலுக்குக் கோமுடிசூட்டி அவனைக்கொண் டுலகளிப்ப வெண்ணன்மேயின னாதலின்.

இன்னும் இயற்கையழகு ததும்பி, அலங்காரத்தோடும் அன்போடுந் தயாதன் முழுமனதையுந் தன்பாலீர்க்குந் தகையளாய், மான்போல் விளங்கிய கைகேயி, உடலு முள்ளமு மொருங்கே கோடிய கூனியின் மொழிகளாற் றன் றூய சிந்தை திரிந்து, தன் புதல்வனாகிய பாதனுக்குத் தாணியும், தயாதன் காதற்புதல்வனும் வென்றிவீரனும் மூத்தவனுமான இராமனுக்கு வனமு மளிப்பான், முன்னே சம்பராசுர யுத்தகாலத்திற் றன்கணவன் றனக்குத் தருவதாக வாக்களித்திருந்த வாமிரண்டையும் பெறவேண்டி, ஸ்த்ரீஸாஹஸத்தை மேற்கொண்டு தன்னை யலங்கோலஞ்செய்து பூவுதிர்ந்த கொம்புபோற் புவிமேற் கிடப்பதைக் கூறுமிடத்து,

'நவ்விவீழ்ந்தெனநாடகமயிறுயின்றென்னக்
கவ்வைகூர்தாச்சனகியாங்கடிகமழ்கமலத்
தவ்வைநீங்குமென்றயோத்திவந்தடைந்தவம்மடந்தை
தவ்வையாமெனக்கிடந்தனள்கேகயன்றனையை.'

(மந்தரைசூழ்ச்சி-88.)

என வோரினிய செய்யுளுரைத்த வாசிரியர், ஈண்டு அவள் விகாரப்பட வீழ்ந்துகிடக்கும் நவ்விபோலக் கிடந்தன ளென்றதற் கேற்பப் பின் மதவேழத்திற்கொப்பாகக் கூறப்படும் தயாதன் அவள் கோயிலையெய்தி, வாயிலின் மன்னர் வணங்கிநிற்ப உள்ளேசென்று, அவளவலங் கண்டு சகியானுப்த் துன்பென்னை யுற்றதெனத் தயருற்றுத் தன் றடக்கைகளாற் றழுவியெடுப்பதைக் கூறுமிடத்தும் அவ்வுவமையை விடாது,

'மடந்தையைமானையெடுக்குமானைபேபோற்
றடங்கைகள்கொண்டுதழீஇயெடுக்கலுற்றான்.'

(கைகேசிசூழ்வினை-3.)

என்றார். இதனானே யோர் மதயானை ஓர் மானைத் தன் பாழிய கையை நீட்டி யெடுக்க முயலுமாயின், அம்மா னெவ்வகை மனநிலையோடு அதன் கையினின் றகப்படாமற் குதித்தொரீஇ யுய்ந்தோட முயன்று துள்ளித்துள்ளி விழுமோ அவ்வகை மனநிலையோடு கைகேயியாகிய மடமானும் அவன் கைகளைநீக்கித் துள்ளித்துள்ளி அகன்றனளென்பது பெறுதும். இதனை,

'நின்றுதொடர்ந்தநெடுங்கைதம்மைநீக்கி
மின்றுவள்கின்றதுபோலமண்ணில்வீழ்ந்தாள்.'

(கைகேசி சூழ்வினை-4.)

என்ற அடுத்தசெய்யுளடிகள் விளக்கும். அவ்வாறே யீண்டுத் தயாதனை யானையென்றதற்கேற்பப் பின் கைகேயி தான் கருதியவாமிரண்டையும் வேண்டி யுரைத்தவுடன்,

'நாகமெனுங்கொடியாடனாவினீந்த
சோகவிடந்தொடரத்துணுக்கமெய்தா
வாகமடங்கலும்வெந்தழிந்தாவின்
வேகமடங்கியவேழமென்னவீழ்ந்தான்.'

(ஷை 11.)

என்றும்,

'......................................வன்கைவேல்வெம்
புண்ணுழைதைக்கவுழைக்குமானைபோல்வான்'

(ஷை 15.)

என்றும் அவ்வுவமையையே சோகத்தினும் விடாதெடுத் தேற்றவாறு கூறினார். பல்லின் விடத்தினுங் கொடுமையுள்ள திட்டிவிடத்தினுங் கொடிதான விடத்தாற்றாக்கப்பட்ட வேழத்தைப்போல வென்பார் 'நாக மெனுங்.....................வேழமென்ன' என்றார். பின் 'கம்பநெடுங்களி யானையன்னமன்னன்' (கைகேசிசூழ்வினை– 1 6.) என்றுங் கூறினார். எனவே, கம்பத்திற் கட்டப்பட்ட யானை யாவற்றையுமழிக்கு மாற்ற லுடையதாயினு மதனிற் கட்டுப்பட் டிருக்குமாறுபோலத் தானுமத் தகை யாற்றலுடையனாபினும் சத்தியத்திற் கட்டுப்பட்டிருந்தானென் பது பெறுதும். கைகேயியை பொறுக்கக்கூடியவன் வாய்மைக்குக் கட்டுப்பட்டுப் புழுங்கினானென்பது கம்பர்கவிகளை யாராய்ந்து தெளிக.

'அரசனு முனிவருமடைந்தவாயிடை
வரமுனிவஞ்சமென் றுணர்ந்தமாலைவாய்
வெருவினர் விண்ணவர்வேந்தன்வேண்டலாற்
கரைசெறியாதலைகட லும்போன்றனன்.'

(கம்ப. திருவவதார – 51.)

'சீற்றந் துறந்தானெதிர்நின் றுதெரிந்துசெப்பு
மாற்றந் துறந்தான்மறைநான்கெனவாங்கல்செல்லா
நாற்றெண்டிரைவேலையினம்பிதனுணையாலே
யேற்றந்தொடங்காக்கடலிற்றணிவெய்திநின்றான்.'

(ஷை நகர்நீங்கு – 142.)

என்ற செய்யுட்களில் வந்துள்ள உவமைகள் ஈண்டு நினைக்கத்தகும். மற்றும்,

'ஈரநீர்படிந்திந்நிலத்தேசில
கார்களென்னவருங்கருமேதிக
ளூரினின்றகன் றுள்ளிடவுண்முலை
தாரைகொள்ளத்தழைப்பனசாலியே.'

(கம்ப. நாட்டு – 25.)

என்னுங் கோசலநாட்டைச் சிறப்பித்துக் கூறுங்கவியொன்றில் ஈரநீர் படிந்துவரு மேதிகள் மேகம்போன்றன வென்றதற்கேற்ப மேதிபடியும் நீர்நிலை மேகம் படியும் வேலைபோலுமெனக் கொள்ளக்கிடக்கு முவமையை விளக்கிப், பின் மற்றோர் கவியில் 'நீரொடு நிகர்வன நிறைகடல்.' (நாட்டு-46.) எனக் கூறிச்சென்ற நயமும் அப்பாற்படும். அப்பெற்றியே கோசலத்தை வீட்டுலகத்திற் கொப்பாக முதற்கவியிற் கூறி வித்திட்டுப் பின் அப்படலமுழுதும் மற்றும் ஏற்ற பலவிடத்தும் அதற்கேற்ப வருணித்துவருந் திறனும் உய்த்துணர்வார்க்குக் கைப்படுநெல்லியாம். பலவுவமைகள் கூறுவதினும் ஒன்றையே யேற்படும் பாதகங்களைநீக்கிப் பலபடக்கூறுவது ஆசிரியர் மதிநுட்பத்தை வெள்ளிடைப்பிறங்கல்போல் விளக்குவதாகும்.

மரபாகவரு முவமைகட்குப் பொதுத்தன்மைகளை யெடுத்துக் காட்டுதலு மிவரறிவின் பெருமையை விளக்குதற்கு மற்றோர் சான்றாகும். அதற்கு,

'அருவியிற்றாழ்ந் து முத்தலங்குதாமத்த
விரிமுகிற்குலமெனக்கொடிவிராயின
பருமணிக்குவையனபைம்பொற்கோடிய
பொருமயிற்கணத்தனமலையும்போன்றன.'

(நகா – 35.)

என்ற செய்யு ளுதாரணமாகும். ஈண் டெடுத்தோதியவற்றைக்கொண்டு உபலக்கணத்தா லமைவனவெல்லாங்கொள்க.

இன்னும் அவ் வுவமைகளின் றன்மையை யேற்ற பொதுத் தன்மைகளை யெடுத்துக் காட்டி விளக்குதலும் அற்றாகும். இதற்குத் தயாதன் இராமபிரானிடம் உலகுகாவலை யொப்பித்துத் தான் றுறவு மேற்கொள்ள விரும்பியதை யவனுக்குத் தெரிவிக்குங்காற் கூறுவதாகக் கூறிய,

'ஒருத்தலைப்பாத்தொருத்தலைப்பங்குவினூர்தி
பெருத்தினீங்குநின்றியல்வாக்குழைந்திடருழக்கும்
வருத்தநீங்கியவ்வரம்பறுதிருவினைமருவு
மருத்தியுண்டெனக்கையவீதருளிடவேண்டும்.'

(மந்திர – 66.)

என்னும் இனிய கவி காட்டாகும். உலகுகாவற்குச் சாகா டுவமை யாதலை,

'கால்பார்கோத் து ஞாலத்தியங்குங்
காவற்சாகாடுகைப்போன்மாணி
னூறின்றாகியாறினி துபடுமே
யுய்த்தறேற்றானுயின் வைகலும்
பகைக்கூழள்ளற்பட்டு
மிகப்பஃறீநோய்தலைத்தலைவருமே.'

(புறநா – 185.)

'ஆர்வலஞ்சூழ்ந்தவாழியலைமணித்தேரைவல்லா
னேர்நிலத் தூருமாயினீடுபல்காலஞ்செல்லு
மூர்நிலமறிதறேற்றா தூருமேன்முறிந்துவீழுந்
தார்நிலமார்பவேந்தர்தன்மையுமன்னதாமே.'

(சீவக – 2909.)

'அஃதாவது மூவிருகூற்றமும் முறைமையிற் கடிதலிற் காவற் சாகா டுகைத்தற் குரியனாகிய அரசன் தீநெறிவிலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல்.'

(திருக்குறள் – அதிகாரம் – 45 – பரிமேலழகருரை)

'இனி முறையானே அரசியனடாத்துதற்கண் ஒன்றற்கொன்று துணையாய அங்கங்களாறனதியல்பு முப்பத்திரண்டதிகாரத்தாற் கூறுவா னெடுத்துக்கொண்டு, அவையாறனுள்ளும் காவற்சாகா டுகைத்தற்கண் அவ்வரசற் கிணையாய அமைச்சனதியல்பு பத்ததிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கண் அமைச்சக் கூறுகின்றார்.'

(திருக்குறள் – அதிகாரம் 64 – ௸.)

என ஆன்றோ ருரைத்தவாற்றா னறிக. உலகுகாவலை நடாத்தும் இறை யைச் சாகாடூர்க்கு மெருத்திற் குவமித்தலும் மரபென்பது,

'...................................பலவேகானற்
கழியுப்புமுகந்துகன்றுடுமடுக்கு
மாரைச்சாகாட்டாழ்ச்சிபோக்கு
முரனுடைநோன்பகட்டன்னவெங்கோன்.'

(புறநா. 60)

'மடுத்தவாயெல்லாம்பகடன்னானுற்ற
விடுக்கணிடர்ப்பாடுடைத்து'.

(திருக்குறள்-624.)

என வந்தவாற்றா னறிதும். இவ்வாசிரியரே,

'தெருளுடைமனத்துமன்னனேவலிற்றிறம்பவஞ்சி
யிருளுடையுலகந்தாங்குமின்னலுக்கிசைந்துநின்று
னுருளுடைச்சகடம்பூண்டவுடையவனுய்த்தகாரே
றருளுடையொருவனீக்கவப்பிணிபவிழ்ந்ததொத்தான்.'

(கைகேசிசூழ்வினை—109.)

என்று பின்னுரைப்பர். ஆகவே, இம் மரபையறிந்த இவர் அக் காவற் சாகாடேத்தன்மைத் தென்பதை யேற்ற பொருத்தன்மைகள் கூட்டி, 'ஒருத்தலைப்பாத்...........வேண்டும்.' என்ற செய்யுளில் விளக்கியுள்ளார்,

ஊர்தியென்பது சாகாடு. பங்குவென்பது சாகாடுகைக்குமோர் முடவனை யுணர்த்திற்று. எருது பூண்டு தாங்கிச் செல்லுஞ் சாகாடு அரசன் பூண்டு தாங்கிச் செல்லுங் காவற் குவமை. ஊர்திபூண்டு அதை நடத்தும் (இழுத்துச்செல்லும்) எருதுபோலக் காவல்பூண்டு அதை நடத்துபவ னாசனாதலின், எருது அரசற்குவமை. *ஊர்தியைக்கொண்டு செல்லு முகைப்போன் காவலைக் கொண்டு செல்லும் (நிகழும்) உலகிற் குவமை. பங்குவினூர்தி—பங்குவையுடைய வூர்தி; ஊர்தியெருத்தின்—ஊர்தியிற் பூட்டிய வெருத்தைப்போல. ஒருத்தலைப்பாரத்தெருத்தின்; ஒருத்தலையெருத்தின்; பங்குவினூர்தியெருத்தின் எனக் கூட்டுக. ஒருத்தலைப்பாரத்தெருதென்றது, உடனிழுக்குமெருதின்றித் தானே முழுப் பாரத்தையுந் தாங்கிய வெருதென்றவாறு. இங்ஙனங்கூறவே யாசற்கு, வேறு தன்போலியரோ டுடனிருந்து காவலை நடாத்துதலின்றித் தானே நடாத்தவேண்டியது கூறியவாறாயிற்று. ஒருத்தலை யெருதென்றது, இத்துணையும் இவ்வெருது, அதன்மே லித்துணையு மிவ்வெருதென மாற்றெருதில்லாது தானே சகடமீர்க்கவேண்டிய எருதென்றவாறு. இங்ஙனமாகவே யாசற்குத் தா னிவ்வளவுகாலங் காவல் நடாத்துவது, தனக்குப்பின் மற்றொருவன் இவ்வளவுகாலம் அதை நடாத்துவதென்ற இம்முறையே, இக்காலத்துக் குடியாசுநாடுகளிற் றேர்ந்தெடுக்கப்பட்டாளும் பிரதிநிதிகள்போலன்றித் தானே யோய்ந்தொழியுமளவும்அதை நடாத்தவேண்டியது கூறியவாறாயிற்று. இவற்றா லேகநாயகத்துவமு மதிலுள்ள மிக்க வருத்தமும் பெறப்படும். சற்றேனு மூர்தியினின் றிழிந்து நடந்துகைப்பவியலாத பங்குவை யுகைப்போனாகக் கூறியதனா லவன் மடுத்தவாயிலு மிறங்காது மிக்க பாரத்தைச் செய்வதுபோல, உலகு மொருகாலத்துங் காவலின்றி நிகழாதாகலிற் காவலை நீங்காது மடுத்தவாயி லாசற்கு மிக்க வருத்தத்தைச் செய்வதென்பது பெறுதும். இவ்வாற்றான் முன்னூல்களிற் காவற்சாகாடென வந்தது கண்டு, ஈண்டு அஃதித்தகையதென்பதை யேற்ற பொதுத்தன்மைகள் கூட்டி விளக்கிக் காட்டியது கற்றோருள்ளத்தைக் கவர்வ தொன்றாகும்.

இனி இவருவமையத்தை விளக்க மற்றோர்திறம் வருமாறு காட்டுவன். அது, தயாதன் றன்னரசுரிமையைத் தனயனுக்குத் தந்து பொன்முடிசூட்டுதற்கு நாள்குறித்து, அணிநக ரணிகென முரசறைவிப்ப, அருந்திமாக்க ளிங்ஙன மணிபுங்காற் கூனிதோன்றுவதைக் கூறுவாராகி,

*இவ்விரண்டுயாத்திரைகளுக்கும் முறையே தேசமுங்காலமு மிடமாகக்கொள்க.

'அங்கணிவுறுமமலைவனவர்
பொன்னகரியல்பினிற்பொலியுமெல்வயி
னின்னல்செய்யிராவணனிழைத்ததீமைபோற்
றுன்னருங்கொடுமனக்கூனிதோன்றினள்.'

(மந்தரைசூழ்ச்சி - 39.)

எனக் கூறிய இக்கவியிலடங்கிய 'இன்னல்செய்யிராவணனிழைத்ததீமை போல்' என்ற வுவமையாகும். இந்திரன்முதலிய விறைவரு மேவல் கேட்ப, மூவுலகையுந் தன்னடிப்படுத்துத் தன்னை வெல்வாரின்றி விண்ணும் மண்ணுந் தன்னநுசராதிபா மெய்வலிபராக்கராற் செய்தவமிழப்ப, இருபதுகரமு மீரைந்துசிரமுமுடைய திருவிலியாகிய இராவணனிழைத்த கொடுமையை யாற்றாத விண்ணவர், பன்னகப் பாயன்மேற் பாற்கடல் வைகு மண்ணலை யடைந்து குறையிரப்ப, அவனு நேர்ந்து இராவணவதத்தை மேற்கொண்டு, அவரை வானரராகிப் பூமியிற் போம்படி யேவித் தான் றன் றுழியுஞ் சங்கமு மனந்தனுமியபாயனு மினளு ராகிவரத் தயரதன் மதலையாகிய இராகவனு யயோத்தியிலவதரித்தானுகலி னவ்விராகவன் பொன்முடி துறந்து புனைசடைதாங்கிப் பூழி வெங்கானம் நண்ணிப் போனலன்றி யிராவணவதமாகிய எடுத்துக் கொண்டகாரிய முடியாதாகலி னித்துணையும் வாளாவிருந்து, மணிமுடி புனையுநா ளணிமையி னெய்த வினித்தாழ்க்கலாகாதென்னுமளவிற் றோன்றி வனம் நண்ணுவிப்பாளாகிய கூனியைத் தன்காலம் வருந்துணையும் புலனுகாது உயிரைப்பற்றிநின்று, அது வந்துழி யுருப்பதாய தீவினையோ டுவமித்தார். இராமாயணத்தின் முக்கிய நிகழ்ச்சி யிராவண வதமேயாக, அதை நிகழ்த்த இராமபிரான் நகர்நீங்குவதைக் கூறும் அயோத்தியாகாண்டமே கதையின் சிறந்த தொடக்கமாகலின், இக்காண்டத் திவ்விடத் திவ்வுவமை கூறியது சாலச் சிறக்கும். தீமையென்ற தீண் டிழவூழை அவ்வூழைத் தடுப்பா ரொருவரு மில்லை. அஃது இன்ன தெய்துமென் றெண்ணொணு வலியுடைத்தாய், மற்றொன் றுசூழினுந் தான் முந்துறும். தன்னை யாக்கிய கிழவ ரறிவைபேயன்றி, யவரா துழிவிற்குச் சாதகமாவா தறிவையும் பேதைப்படுக்கும். ஒருவர்மாட்டவர்க்குள்ள அன்பைக் கெடுத்து வன்மைக் கொடுக்கும். நல்லவற்றைத் தீயவாகக் காட்டும். தீயவற்றை நல்லவாகக் காட்டும். காதல் பெருகுமாறு பொருள்களைக் கிழவர்க்குக் காட்டிக் கடுங்கேடெய்துவிக்கும்.

பிறராக்கம் வெஃகு மியல்புடையானுக் கிழவூழெய்தின், அஃது அவன் அவ்வாறு வெஃகி யுடையனாவிடவெய்துமாறாக்கத்தொடு பிறனொருவனை யணிமையினெய்துவிப்பத் தக்கவாறுமுயன் றங்ஙனமேசெய்யும். தீங்கே செய்யுமியல்புடையானுக் கிழவூழெய்தின், அஃது அவன் றீங்கை யொருவன்பாற்செய்து அவனாற்றீங்கெய்துமாறு தக்கானொருவனை யவன்பாற் செலுத்தும். செலுத்துதற் குடம்படாதா ராளராயி னுடம்படுதற்கேற் றதை யாராய்ந்து தோற்றுவித் துடம்படுத்தும். ஒருவரைப் பேதித் தவரைக்கொண்டே யேற்படுமிடையூறெல்லாம் நீக்கிக்கொள்ளும். அவருக் குபாயங்களையுந் தானே தோற்றுவிக்கும். இன்னு மிதன்றிறமை யெண்ணி வரையறுக்கப்படுவதொன்றன்று. இன்னோரன்ன தன்மையிற் றன்னருங் கொடுமனக் கூனி, தன் கூற்றைத் தடுத்துரைத்து வெல்லவல்லாரின்றித் தயரதன் றாசாதி முடிபுனைந்து நாடாளுமாறு சூழத் தான் அவன் சடைபுனைந்து காடாளுமாறுசூழ்ந்து முந்துற்றுக் கோசலைதரிசில்பாற் கைகேயிக்குள்ள ஆழ்ந்தபேரன்பைக் கெடுத்து வன்பைக் கொடுத்து இராகவன் நாடாளல் தீதாகவும் இளவலாகிய பரதன் நாடாள அவன் காடாளல் நன்றாகவும் காட்டி அவளறிவைப் பேதைப்படுத்து அவற்றிற்கு மன்னவ னுடம்படானாகவின் அவன் கைகேயிக் களிக்கவேண்டிய வரமிரண்டினாலும் உடம்படுத்து முபாயத்தையுமாராய்ந்து அவளுக்குத் தோற்றுவித்துத் தீங்கே செய்யும் இராவணன் தீங்கெய்துமாறு இராமனைத் தன்செல்வமாகிய தேவியொடுங் காட்டிற் செலுத்துபவளாகிய கூனியின் றோற்றத்திற்கு அவ்விராவண*னிழலூழின் றோற்றத்தை யுவமித்ததிறத்தைக் காணின் இம்மஹாகவியைக் கவிச்சக்ரவர்த்தியென்றுபோற்றிப் புகழ்தல் புனைந்துரையன்றென்பது தெள்ளிதின் விளங்கும். ஈண்டுக் கூறிய இவ்வுவமை மேல்விரிந்து வளருங் கதைமுழுது மடங்கியதோர் வித்தாய் விளங்குவது காண்க. அவ்வாறே இராகவன் நகரம்நீங்கி யோர் சோலையில்வைகிச் சுமந்திரனைத் தேரோடும் அயோத்தி செல்லுமாறு விடுத்துச் சானகியோடுந் தம்பியோடும் வனம்புகுந் தருவாயில், அவன் மேற்கொண்டுசெல்வதாகிய மேல்

* தயரதனமைச்சரதமைதி கூறுங்கால்,

'இல்லைவந்துறுவனவுற்றபெற்றியிற்
றொல்லைநல்வினையெனவுதவுஞ்சூழ்ச்சியார்',

என ஆகூழை யுவமித்த தீண்டு நினைக்கத்தகும்,

வருந் தேவாசுர யுத்தத்தைச் சூசிப்பித்து, அதற்குமுன் னிகழ்வதோர் *கன்னிப்போர்வெற்றிபோலச் சந்திரோதயத்தை வருணித்த,

'பொய்வினைக்குதவும்வாழ்க்கையரக்கரைப்பொருந்தியன்னார்
செய்வினைக்குதவுநட்பாற்செல்பவர்த்தடுப்பதேய்க்கு
மைவிளக்கியதேயன்னவயங்கிருடரக்கவானங்
கைவிளக்கெடுத்ததென்னவந்ததுகடவுட்டிங்கள்.'

(தைல-49.)

என்னுந் தீங்கவி கற்றோ ருள்ளத்தைக் களிப்பிடை மூழ்குவிப்பதொன் றாம். நிறவொற்றுமையாலும், நிசியிலே சரிப்பவர் †நிசிசராதலாலும், இரவு இராக்கதருக்கு நட்பாய்ப் போர்செய்வதாயிற்று. வானிலுதிப்ப தாலுந் தூய்மையாலுங் கடவுட்டிங்களாதலாலுந் திங்கள் தேவர்கட் காகப் போர்செய்வதாயிற்று. இஃது இருதிறத்தார்க்கும் பெரும்போர் நிகழ்வதற்குமுன்னே அவர்களு ளிரு மல்லர்க்குள்ளே போர் சிறு போர் நிகழ்ந்ததுபோ லாயிற்று. இராக்கதரை வெல்வான் வருவானை யவர்க்குத் துணையாய்த் தடைசெய்தவிருளைத் தேவர்க்கு துணையாய்த் திங்க ளோட்டி விளங்கிற்றெனத் திங்கள் வெற்றி கூறவே, மேல்வரும் போரிற் றேவர்வெற்றியுஞ் சூசிப்பித்தவாறாயிற்று.

இன்னும், இராவண வதத்தோடு தொடர்புடைய மற்றொரு நிகழ்ச்சியாகிய காப்பியத்தலைவன் றிருமணங்கூறுங் கடிமணப்படலத்து இராகவன் றிருமணக்கோலங் கோடலைக் கூறுங்கால்,

'பந்திசெய்வயிரங்கள்பொறியிற்பாடற
வந்தமில்சுடர்மணியழலிற்றோன்றலாற்
சுந்தரத்தோளணிவலயந்தொல்லைநாண்
மந்தாஞ்சுற்றியவரவைமானுமே.'

(கடிமண—56.)

எனவுரைத்த வின்கவியிற்காணுமோ ருவமையு மிப்பெற்றியதே. என்னை? இயல்பாக மந்தரத்தோ டொக்குந்தோ ளிண்டு வாசுகியாகிய அரவுசுற்றிய மந்தரத்தோ டொத்த தென்றவாறு. மந்தரத்தில் வாசுகி சுற்றியதன்

---

* தாடகையுத்தத்தைக் கன்னிப்போரென்ற தீண்டு நோக்கத்தகும்.

† நிசிசரர் – நிசாசரர், இராக்கதர்.

*பயனாகத் திருமகள்தோன்றித் திருமாலை மணந்தனள்: தேவர்களமு துண்டனர்: அமரரோங்க அரக்கர் வலியிழந்தனர்: அறனோங்கியது: தேவர்க ளிழந்த திருவை யெய்தினர். அவ்வாறே திருமாலாகிய இவன் இவ்வாறு கோலங்கொண்டு திருமகளாகிய சீதாபிராட்டியை மணஞ் செய்தலும், யாவருங் களியுண்ணலும், அமரரோங்க அரக்கர் வலியழித லும், அறனோங்கலும், தேவர்க ளிழந்த திருவை யெய்தலும் பெறப்படும். ஈண்டுங் கதையின் முக்கியநிகழ்ச்சி தோன்றுதல் காண்க.

இனிப் புனைவுளியைப் புனைவிலியாக்கிப் புனைவிலியைப் புனைவுளி யாக்கிப் புகழ்பொருளை மிகச்சிறப்பித்துவரும் உவமைகளும், இதற்கு மேலாகக் கூற வியலாதென்னும்படி வருவனவும், ஸாஸ்த்ர முடிபுகளை யும் நியாயங்களையும் நீதிகளையும் உண்மைகளையும் அடக்கிக்கொண்டு வருவனவும், ஆங்காங்குக் காணப்படும் இல்பொருளுவமைகளும், இயற் கையானவும், அதிசயித்துக் கூறுவனவும், சப்தசாதுர்ய மடங்கி வரு வனவும், அவ்வந்நிலையி லொவ்வொருவ ருள்ளக்கிடக்கையையுங் காட்டி மெய்ப்பாடு தோற்றுவிக்கு மொவ்வோருவமைச் சொற்களும் முதலாகப் பலவாறு பயின்றுவரு முவமைகளையும் அப்பெற்றியேவரும் உருவகங் களையும் முற்றவுமெடுத்துத் தெற்றென விரித்து விளக்குதல், ஆசைபற் றியதோர் பூசை ஒசைபெற்றுயர் பாற்கடலுற்று அதை முற்றவு நக்குபு புக்கது போல்வதொன்றாய்க் கரையிறந்து விரிந்து காலத்திற்கும் என் சிற்றறிவிற்கு மெட்டுவதன்றாகலின், அவற்று ளொரு சிலவற்றை யீண்டு விளக்கி முடிக்க முயல்கின்றேன்.

ஓர் பொருளை மிகச் சிறப்பிக்கவேண்டிற் புனைவுளியைப் புனைவிலி யாக்கிப் புனைவிலியைப் புனைவுளியாக்கி யுவமை கூறுந்திறம், ஆன்றோர் கையாண்டதோர் தந்திரநெறியாம்.

'இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்.'

(திருக்குறள் – 940.)

என வள்ளுவனாரும் சூது என்ற அதிகாரத் துரைத்தமையும், ஆண்டுப் பரிமேலழகர் 'உயிரினதறியாமை கூறுவார்போன்று சூதனதறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக்

* ஈண்டுப் பயனென்றது நேரேயாம் பயனேயன்று.

கூறினர்' என விசேடவுரை கூறிச்சென்றமையுங் காண்க. இந்நெறி கம்பர்காவியத்தில்,

'இயல்புடைபெயர்வனமயின்மணியிழையின்
வெயில்புடைபெயர்வனமிளிர்மூலகுழல்போற்
புயல்புடைபெயர்வனபொழிலவர்விழிபோற்
கயல்புடைபெயர்வனகடிகமழ்கழனி.'

(நாட்டு – 42.)

'இடைபிறமகளிர்களெறிபுனன்மறுகக்
குடைபவர்துவரிதழலர்வனமுருத
மடைபெயானமெனமடநடையிளகக்
கடைசியர்முகமெனமலர்வனகமலம்.'

(ஷை – 43.)

'கோகிலநவில்வனவிளையவர்குதலைப்
பாகியல்கிளவிகளவர்பயினடனே
கேகயநவில்வனகிளரிளவளையி
னாகுகளுமிழ்வனநகைபுரைதாளம்.'

(ஷை – 69.)

என வருவன முதலியவற்றுற் பார்த்து பயிலக் காண்டும். புனைவுளியினும் புனைவிலி சிறந்ததாய்ப் பிரசித்தமாக முன்னே முடிந்துகிடப்பதொன்றாகலின், மரபாகவரும் புனைவுளிகளைப் புனைவிலிகளாக்கவே, விளக்கம் வேண்டி யெடுத்துக்கொள்ளப்பட்ட அவை பிரசித்தமாய் முன்னே முடிந்துகிடந்த சிறந்த பொருளென்பது தோன்றும். அன்றியும், புனைவிலிக்கே புனைவிலியாதலின் மிகச்சிறந்த வென்பதும் போதரும்.

இவ்வாறாகவே, ஈண்டுக் கூறிய மயில் முதலியவை ஏனைநாட்டு மகளிரியல் முதலியவற்றிற் குவமைபாவனவே யன்றி, இந்நாட்டு மகளிரியல் முதலியவற்றிற் குவமையாகா; அவரியல் முதலியனபோலத் தாமிருப்பன வென்றவாறாயிற்று. எனவே, இந்நாட்டு மகளிர ழகிற் கச்சாகவுள்ளனரென்பது பெறுதும்.

இன்னும், ஸாஸ்த்ரமுடிபுகளைக் கொண்டு பிராட்டியி னிடைக்கு வியாபகமாய் நிற்கும் பரம்பொருளை யுவமித்து,

'சில்லியலோதிகொர்கைத்திரண்மணிக்கனகச்செப்பில்
வல்லியுமதனன்வில்லுமான்மதச்சாந்திற்றீட்டிப்

பல்லியனெறியிற்பார்க்கும்பரம்பொருளென்னயார்க்கு
மில்லையுண்டென்னநின்றவிடையினுக்கிடுக்கண்செய்தார்.'

(கோலங்காண் – 12.)

எனக் கூறியதோர் செவிநுகர்கவி பெரிதும் இன்பம் பயப்பதொன்றும். இதில் 'பல்லியனெறியிற்பார்க்கும்...................நின்றவிடை' என்றதனால், முதற் காட்சிக் கெய்தாமையி னில்லையென்றும், காணப்பட்டவாதேயமாகிய வுலகைக் கொண்டு காணப்படாத வாதாரமாகிய முதற் பொருட் குண்மை கூறு முறையா னறியப்படுதலி னுண்டென்றுங் கூறப்படும் பரம்பொருள்போல முன்னே காட்சிக்குப் புலனாகாமையி னில்லையென்றும், காணப்படும் ஆதேயமாகிய மேலுறுப்பைக் கொண்டு காணப்படாத ஆதாரமாகிய வுறுப்புக் குண்மை கூறு முறையா னறியப்படுதலி னுண்டென்றுங் கூறப்படுவது பிராட்டியினிடையென்பது கொள்ளப்படும். முன்னே யிவ்வாறாராய்ந்து நோக்கப் பின் காட்சிக்கும் புலனாங் கடவுள்போல இடையும் அவ்வாறு காணப்படுவதூஉங் கொள்க. ஈரிடத்துஞ் சத்தத்தா லறிதலுங் கொள்க. வடிவின்றி வியாபகமாய்ப் பல சமயத்தார்க்கும் பொதுமையினின் றிவ்வா றறியப்படு முதற் பொருளென்பார் 'பல்லியனெறியிற்பார்க்கும்பரம்பொருள்.' என்றார். முன்னே அப்பொருளுண்மையறியுமாற்றை யிவரே கடவுள்வாழ்த்துக் கூறுமிடத்து விரிவாக விளக்கியுள்ளமை யீண்டுச் சிந்திக்கத் தகும். அதனை பொருவாறு சுருக்கிக் காட்டுவன்.

'உலகம்யாவையுந்தாமுளவாக்கலு
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
வலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணங்களே.'

(தற்சிறப்பு – 1.)

கடவுளை வாழ்த்தப் புக்கார், முன்னே அது பலர்க்கும் ஒப்ப முடியுமாறு கடவுள துண்மை தெரித்துப் பின்னே வாழ்த்துதல் நன்றாகலி னவ்வுண்மை கூறுதல் ஈண்டு 'உலகம்.....................தலைவர்' என்றதனாற் பெறப்படும்.

உலகுண்மை யாவருங் கண்கூடாகக் காண்பது. அதிலறியப்படுவதென்னையெனின், ஒவ்வொருபொருளும் ஒருகாலத்தே தோன்றுதலும், சிலகாலம் நிலைபெறுதலும், ஒருகாலத்தே யழிதலுமாம்: இவ்வவத்தை

யிற் காண்போரும் அடங்கியுள்ளவரே: நிகழ்வனவெல்லாம் இஷ்டமா? அநிஷ்டமா? எனின் இரண்டும் விரவியனவே: அவ்வாறாயின் ஒருவன் தனக்கிஷ்டத்தையே யுளவாக்கி யநிஷ்டத்தையெல்லாம் நீக்கிக்கொள்ள லா மன்றே? அங்ஙனமின்றி அவை யிடலாவென்ப தய்த்துணரத் தெரிவதாகிறது. அழிதல் அநிஷ்டமேயாக அதைத் தடுத்துய்ந்தா ரொருவரையுந் தெரிகிலம்: அநிஷ்டப்பொருளெல்லாவற்றையு மழிக்கு மாற்றலுடையா ரெவரையுங் காண்கிலம்: இஷ்டப்பொரு ளெல்லாவற்றை யும் படைத்துக்கொள்ளவல்லா ரெவரையும் பார்க்கிலம்: அழிதன் மாலைத்தாய பொருள்களையெல்லாம் வேண்டுமளவும் நிலைபெறுத்துவாரை யும் அறிகிலம்: உறக்கமுண்டாதலும் நீங்குதலுங்கூட நாம் சுதந்தர மாய்ச் செய்வதாயில்லை: இங்ஙனமே உலகமெலாங் காணப்படுகிறது: இவ்வுலகத்தி லெல்லாம் வல்லவராயிருப்பவரெவரையுங் காணேம்: என இவ்விதமாக ஆராயவே இவ்வுலகு சுதந்தரமுடையதன்று: அதற்காதார மாய் அதை நிகழ்த்தும் நிமித்தனாகிய சர்வசக்தனொருவன் இருக்க வேண்டுமெனப் *பாரதந்திரிய வுணர்வும், உடனே பரனுணர்வுந் தோன்று மாகலின் இவ்வகைக் குறியாராய்ச்சியை யடக்கியே 'உலகம்............ தலைவர்' என்றாரென்க. இவ்வாறே வள்ளுவனாரும்,

'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.' (திருக்குறள்–1.)

என முதற்கடவு ளுண்மை கூறியே தொடங்கியவாறும், அதனைப் பரிமே லழகர் விளக்கியவாறுங் காண்டும். இவற்றின் விசேடமெல்லாம் வல்லார் வாய்க் கேட்க.

இனி, உவமையெனவே உருவகமும் அதன் பேதமானதொன்று மாதலின் அதன்நயத்தைக் காண்பதும் நலமாமென்றுகருதி, ஒன்று கூறுவான் றொடங்குகின்றேன்.

'சீதப்பனிநீரளவித்திண் சாந்துதவுந்தண்கால்
போதத்தளவேதவழ்வித்தில்சொற்புகலாநின்று
ஞேதக்கடனஞ்சனையாளுரைநஞ்சொருவாறவியக்
காதற்புதல்வன்பெயரேபுகல்வா னுயிருங்கண்டான்'
(நகர்நீங்கு – 39)

* பாரதந்திரியஞானந் தோன்றவே பரனுந் தோன்றுவ னென்ப தான்றோர் துணிவு.

என்பது தயாதன் பலகாற் பலவும் பன்னியிரந்துங் கைகேயி தான் வேண்டிய வர மிரண்டையுங் கைவிடாளாக மூர்ச்சித்துக்கிடந்தானை, வசிட்டன் றன் பொற்றாமரைபோற் கையாற் பூமியினின்றெடுத்துக் கைகேயியே இராமனுக்கரசைத் தருமாதலி னயர்வொழிய வேண்டுமென் றிரந்து தேற்றுநிற்குங்கால் நிகழ்ந்தது கூறுவதோ ரினியசெய்யுளாகும். இதனுள் 'ஓதக்கடல் நஞ்சனையாள் உரைநஞ்சு' என்பது ஒருவமையும் ஓருருவகமுங் கொண்டிலகுந் தொடர். நல்ல பாற்கடலிற் பிறந்த நஞ்சு போன்று, நல்ல கேகயர்குலத்திற்பிறந்த கைகேயி உரைத்த சொல்லாகிய நஞ்சென்பது இதன் பருப்பொருள். எனவே, கைகேயி தோற்றமே நஞ்சு போன்ற தென்பதூஉம், சீதளமா யமுதமீன்ற பாற்கடலிற்பிறந்த நஞ்சு போலாது இவ்வுரைநஞ்சு நஞ்சிற்பிறந்த நஞ்சாய் அதனினுங் கொடிதா மென்பதூஉம் பெற்றும். நஞ்சிற்பிறந்த நஞ்சு அதனினின்று வடித் தெடுத்த சாரம்போலாம். அந்நஞ்சு *ஒருவரான் முற்று மடக்கப்பட்டது. இஃ தொருவாறன்றி முற்றும் எவராலும் அடக்கப்பட்டிலது. அது தன்னை யடைந்தாரைத் தபிப்பது. இது உலகமூன்றையு மொருசேர வருத்துவதாத லன்றியும் ஒருவரைத் தாக்கியதுணையானே யுலகை யெல்லாம் வருத்திப் பின் தான் பிறந்த இடத்தையுந் தபிப்பதென்க. ஆகவே இந் நஞ்சின் மிக்க கொடுமை வெளியாம். இவ்வாறே வருவன இன்னு மிறப்பப் பலவுள.

இத்துணையு முரைத்தவாற்றானே கல்விப் பெருமையுந் தெய்வீக சக்தியும் வாய்ந்து திகழ்ந்த நம் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட் டாழ்வாரது உவமநயத்தை பொருவாறு காணலாமாயினும், அவை யெல்லா மதை விளக்குதற் கணுவளவும் போதியவாகா வென்ப தியாவரு மறிவர். ஆனா லின்னுங் கூறுதற் கேற்ற ஆற்றலும் அறிவு முடைய னல்லே னாகலி னிம்மட்டில் நிறுத்துகின்றேன்.

ஜெ. நாராயணசுந்தரம்.

---

*அது சிவபிரானா லடக்கப்பட்டவாறும், இஃ தவனை யொத்த வசிட்டனா லடக்கப் படாதவாறுங் காண்க. வசிட்டனுக்குச் சிவபிரானை உவமைகூறும் வழக்குண்மை 'தவண்மதிபுனையானிகர்முனிதாவே' (கம்ப-திருவவதார-127.) என்பது முதலிய இடங்களா னறிக.